விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 289 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 17 புதன்கிழமை (04.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

முல்லைத்தீவு நீதிபதி
## அதிகாரங்களை பயன்படுத்தவில்லை
நீதி அமைச்சர் விஜயதாஸ

7ஆம் பக்கம் பார்க்க


நீதிபதிக்கு அச்சுறுத்தல்
## சுயாதீன விசாரணையை முன்னெடுக்க வேண்டும்
சபையில் எதிர்க்கட்சித் தலைவர்

3ஆம் பக்கம் பார்க்க

# சர்வதேச விசாரணைக்கு இலங்கையில் இடமில்லை

## ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்

(கொழும்பு)
இலங்கை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சர்வதேச விசாரணைக்கு இடமளிக்காது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாக அறிவித்துள்ளார்
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போது, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என முன்வைக்கப்பட்டு வரும் கோரிக்கைகள் பற்றி எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
“இலங்கை அரசு 15



## வடக்கு - கிழக்கில்
# நீதிமன்றங்கள் முற்றாக ஸ்தம்பிதம்

- முல்லை நீதிமன்றம் முன் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்.
- முல்லை நீதிபதிக்கு நீதி கேட்டு அணி திரண்ட சட்டத்தரணிகள்.

(02ஆம் பக்கம் பார்க்க)



## சட்டத்தரணிகளை அச்சுறுத்திய பொலிஸார்



15

## வவுனியாவில் விபத்து மாணவன் உயிரிழப்பு

(வவுனியா)
வவுனியா புதுக்குளம் பிரதேசத்தில் ஏற்பட்ட விபத்தில் பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
குறித்த விபத்தானது நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது. 15



## சில தினங்களில் உ/த பரீட்சை திகதி அறிவிப்பு

(கொழும்பு)
உயர்தரப் பரீட்சைக்கான திகதி 15

## ஒக்ரோபர் 15 புலமைப்பரிசில் பரீட்சை

(கொழும்பு)
2023ஆம் ஆண்டுக்கான தரம் 5 15

## லிட்ரோவின் விலை திருத்தம் இன்று அறிவிப்பு

(கொழும்பு)
லிட்ரோ எரிவாயுவின் விலை திருத்தம் இன்று மேற்கொள் 15

யாழில் இன்று மாபெரும் மனித சங்கிலிப் போராட்டம்
# பேரினவாத அடக்குமுறைக்கு எதிராக அனைவரையும் அணிதிரளுமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)
பேரினவாத அடக்குமுறைகளுக்கு எதிராக மாபெரும் மனித சங்கிலிப் போராட்டம் இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.
இந்த மனித சங்கிலிப் போராட்டம் மருதனார்மடத்தில் காலை 9 மணியளவில் ஆரம்பித்து யாழ்.நகர் வரையில் முன்னெடுக்கப்படவுள்ளது.
இந்தப் போராட்டத்தில் மாபெரும் மனிதச் சங்கிலியாகக் கைகோர்த்து, நீதி கோரிட 15

முல்லை நீதிபதிக்கு அச்சுறுத்தல்
## கொழும்பில் கண்டன போராட்டத்துக்கு ஏற்பாடு

(கொழும்பு)
முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமையை கண்டித்து கொழும்பு உயர் நீதிமன்ற முன்றலில் எதிர்வரும் 09ஆம் திகதி மாபெரும் கண்டனப் போராட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 15

சரவணராஜா பதவி விலகல்
## முல்லை பயணமாகும் இரு சி.ஐ.டி விசாரணைக்குழு

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா, பதவி விலகி நாட்டிலிருந்து வெளியேறியமை தொடர்பாக விசாரணைகளை முன்னெடுக்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் 2 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸின் பணிப் 15

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நீதியைக் காக்கும் உங்கள் நாளிதழ்

## நீதிமன்றங்கள்...

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா அவர்களிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக வடக்கு மாகாணங்களிலுள்ள சட்டத்தரணிகள் இணைந்து மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று முல்லைத்தீவு நீதிமன்றம் முன்பாக நேற்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த ஆர்ப்பாட்ட பேரணியானது நேற்று காலை 11 மணியளவில் முல்லைத்தீவு நீதிமன்றம் முன்பாக ஆரம்பித்து பேரணியாக முல்லைத்தீவு நகர சுற்றுவட்டத்தையடைந்து மீண்டும் நீதிமன்ற வளாகத்திற்கு முன்பாக எதிர்ப்புக் கண்டன போராட்டத்துடன் நிறைவு பெற்றது.

குறித்த போராட்டத்தில் நீதித்துறை மூலம் நீதியான சட்டவாட்சி நடைமுறைப்படுத்துவதை தடுக்காதே, கௌரவ நீதிபதிகளின் கடமையில் தலையிடாதே!, நீதி அமைச்சரே அநீதிக்கு துணை போகாதே, நீதிபதிகளின் பாதுகாப்பை குறைக்காதே, நீதித்துறையை சுயாதீனமாக செயற்படவிடு, கௌரவ நீதிபதிகளே சட்டத்தரணிகளாகிய நாங்கள் உங்களுடன், நீதித்துறை சுதந்திரத்தை பாதுகாப்போம் போன்ற பல்வேறு வாசகங்கள் தாங்கிய பதாதைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் கிளிநொச்சி, வவுனியா, மன்னார் உள்ளிட்ட வடக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து சட்டத்தரணிகள் சங்கங்களின் சட்டத்தரணிகளும் இணைந்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது வடமாகாணத்திலுள்ள ஏனைய மாவட்ட சட்டத்தரணிகள் குறித்த விடயத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் எதிர்வரும் இரண்டு வாரத்திற்கு கறுப்பு நிற முகக்கவசம் அணிந்து கடமையில் ஈடுபட இருப்பதாக தெரிவித்திருந்தனர்.

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக, வடக்கு - கிழக்கு மாகாணங்கள் முழுவதிலும் உள்ள நீதிமன்றங்களின் நடவடிக்கைகள் நேற்று முடக்கப்பட்டிந்தன.

இதனால் யாழ்ப்பாணம் நீதிமன்றவளாக செயற்பாடுகளும் முற்றாக முடங்கின.

யாழ்மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஒன்றுகூடி, முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா தொடர்பிலும், நீதித்துறையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தி சட்டவாட்சியை நிலைநாட்டவும் ஏதுவாக இரு நாட்கள் சட்டத்தரணிகள் வடமாகாண நீதிமன்ற நடவடிக்கைகளை பகிஷ்கரிப்பது என தீர்மானம் எடுத்திருந்தனர்.

அதன்பிரகாரம் இன்றைய தினம் புதன்கிழமையும் யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்தில் சட்டத்தரணிகள் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக, முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம் நேற்று முன்தினம் ஆரம்பித்த காலவரையறையின்றிய தொடர் நீதிமன்றப் புறக்கணிப்பு நடவடிக்கைகள் நேற்று இரண்டாவது நாளாக தொடர்ந்தது.

நீதிதுறைக்கான சுதந்திரமும், சுயாதீன தன்மைகளும் உறுதி செய்யப்படும் வரை பணிபுறக்கணிப்பில் ஈடுபடுவோம் என முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானம் மேற்கொண்டதாக முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் த.பரஞ்சோதி ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

அதற்கமைய நேற்று முன்தினம் ஆரம்பித்த காலவரையறையின்றிய தொடர் நீதிமன்றப் புறக்கணிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

(ம-7,33,104,299)


## சாவகச்சேரி நகராட்சி மன்றம் ஆதனப் பெயர்மாற்றம்

சாவகச்சேரி நகராட்சிமன்றத்திற்குட்பட்ட வட்டாரம் 11, சப்புச்சிமாவடி பிள்ளையார் கோயில் வீதி, 101 (101பழையது) எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சரவணை கந்தையா, உரிமை கோருபவர் - தாமோதரம்பிள்ளை பெண் மீனாச்சி என்னும் பெயரில் ஆதனவரிப்பெயரேட்டில் பதியப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை பெரியமாவடி சாவகச்சேரியை சேர்ந்த குணசேகரம் கைம்பெண் சுமதி, குணசேகரம் நிசாந்தன், குணசேகரம் மகள் சரண்யா ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு செ.கணபதிப்பிள்ளை அவர்கள் மூலம் 2016 இலக்க 19.04.2010ம் திகதியில் நிறைவேற்றிய நன்கொடை வெளிப்படுத்தல் உறுதிமூலம், முதலாம் தரப்பினரின் மகளும் மற்றையோரின் சகோதரியுமாகிய குணசேகரம் சுகன்ஜா பெற்றுள்ளார்.

மேலும் இவ் உறுதியில், வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சி பகுதி சாவகச்சேரி கோவில்பற்று சாவகச்சேரி இறை "கட்டையடி வளவு" நிலப்பரப்பு 2 எல்லைகள் கிழக்கு பாலசுந்தரம் மனைவி ஜெயமலருக்குரிய ஆதனம், வடக்கு குணசேகரம் மனைவி சுமதிக்குரிய ஆதனம், மேற்கு கந்தையா இரத்தினத்துக்குரிய ஆதனம், தெற்கு றோட்டு. இவ் ஆதனமானது முதலாம் தரப்பினரின் முதலாமவரின் கணவரும் மற்றையோரின் பிதாவுமாகிய குணசேகரம் வழிவந்த முதுசமும் நெடுங்கால தடையற்ற ஆட்சியுமானது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பின்னர் கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த குணசேகரம் சுகன்யா என்பவரால் தவசிக்குளம் மிருசுவிலை சேர்ந்த தாமோதரம்பிள்ளை பேரின்பசிவம் பெண் விஜிதாவிற்கு பிரசித்த நொத்தாரிசு திஷாந்தினி வேணுகஜன் அவர்கள் மூலம் 27.11.2016ம் திகதியில் நிறைவேற்றிய 02ம் இலக்க அறுதி உறுதிமூலம் இவ்வாதனம் சென்றடைந்துள்ளது.

பின்னர் தவசிக்குளம் மிருசுவிலைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை பேரின்பசிவம் பெண் விஜிதா என்பவரால் வல்வெட்டி, வல்வெட்டித்துறையை சேர்ந்த சிவசுப்பிரமணியம் ஜெகதாஸ் இற்கு பிரசித்த நொத்தாரிசு திஷாந்தினி வேணுகஜன் அவர்கள் மூலம் 20.05.2020ம் திகதியில் நிறைவேற்றிய 609ம் இலக்க அறுதி உறுதி மூலம் இவ்வாதனம் சென்றடைந்துள்ளது.

இவ்வர்தனம் உத்தரவு பெற்ற நில அளவையாளர் சிவராசா அவர்களால் 23.11.2016 திகதி அளந்து வரையப்பட்ட 5355ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1 என சுட்டப்பட்ட நிலப்பரப்பு 01 குளி 15.02 என காட்டப்பட்டுள்ளது.

தற்போது சிவசுப்பிரமணியம் ஜெகதாஸ் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்கமுடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளரது பெயருக்குப்பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செயலாளர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.
03.10.2023

(17335)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127



## மரண அறிவித்தல்



### நாகநாதன் பாக்கியம்

கிளானை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதன் பாக்கியம் நேற்று 03.10.2023 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற நாகநாதன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு, பசுபதி, பூரணம், வயிரமுத்து(அப்பாண்ணை), சோமசுந்தரம், நாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 04.10.2023 புதன்கிழமை மு.ப 8.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கிளானை, கொல்லங்கலட்டி. (C-7370) தகவல்: குடும்பத்தினர்



## 45ம் நாள் நினைவு நிகழ்வும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் ஜீவரஞ்சினி விவேகானந்தராசா (ஜீவா ரீச்சர்)
தமிழாசிரியர், உப அதிபர்
கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்
பிறப்பு - 1970.09.21
இறப்பு - 2023.08.21

21.08.2023 வீதி விபத்தில் எம்மை விட்டு பிரிந்த எமது இல்லத்தின் இளவரசி ஜீவாவின் 45 ஆம் நாள் நினைவு நிகழ்வுகள் இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் இந் நிகழ்வில் கலந்து அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் தயவாக அழைக்கின்றோம்.

"அழகிய மலர்களே இறைவனின்
பூசைக்காக முதலிலே பறிக்கப்படுகின்றன
நீ மலர்ந்த முற்றங்கள் காத்துக்கிடக்க
நீளும் காலங்கள் முட்களாய் பரந்து கிடக்க
எங்ஙனம் கடந்து செல்வோம்"

52, கட்சன் வீதி,

(C-7368)


குடும்பத்தினர்
உறவினர், நண்பர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு–கிழக்கு மாகாண சட்டத்தரணிகள்


# முல்லைத்தீவு நீதிமன்றம் முன்பாக

# மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி








முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ.சரவணராஜாவிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள சட்டத்தரணிகள் இணைந்து மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று முல்லைத்தீவு நீதிமன்றம் முன்பாக நேற்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.



மட்டக்களப்பு


திருகோணமலை

# முற்றாக முடங்கிய நீதிமன்றங்கள்


யாழ்ப்பாணம்


மன்னார்


முல்லைத்தீவு


மன்னார் சிவில் சமூக அரசியல் பிரதிநிதிகளும் ஆர்ப்பாட்டத்தில்...

# நீதிபதியின் பதவி விலகலுக்கு சுயாதீன விசாரணை அவசியம்

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ.சரவணராஜா பதவி விலகியமைக்கான காரணம் தொடர்பில் நேற்று பாராளுமன றில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அவர். பதவி விலகியமைக்கான கார ணம்தொடர்பில். சுயாதீன விசாரணை ஒன்று முன்னெடுக்கப்பட்ட வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளு மன்றில் தெரிவித்தார்.

நீதிபதிக்கு சில தரப்பினரால் அழுத்த ங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளதாகவும் அவரது உத்தரவை மாற்றியமைக்குமா றும் கூறப்பட்டுள்ளது. இது. நீதிமன்றின் சுயாதீன தன்மையை பாதிக்கும் விடய மாகும். அதன் பின்னணியில் செயற்பட்ட வர்கள் குறித்து வெளிப்படுத்தப்பட வேண் டும் என சஜித் தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னணி வீரர்களின் இறுதிப்போட்டியாக அமையவுள்ள உலகக்கிண்ணம்







இந்த உலகக் கிண்ணம் சில முன்னணி வீரர்களுக்கு கடைசி உலகக் கிண்ணப் போட்டியாக இருக்கப் போகிறது.

ரோகித் சர்மாவுக்கு இது 3ஆவது உலகக் கிண்ண போட்டியாகும்.

அடுத்த உலகக் கிண்ண போட்டிக்குள் அவருக்கு 40 வயதாகிவிடும். இதனால் முழு உடல்தகுதியுடன் நீடிப்பது கடினம். மேலும் ஐ.பி.எல். கிரிக்கெட்டில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக 5 முறை கிண்ணத்தை சுவீகரித்த ரோகித் சர்மா, இவ் உலகக் கிண்ணப் போட்டியில் கபில்தேவ், டோனி ஆகிய இந்திய கப்டன்கள் வரிசையில் வெற்றிக்கொடி நாட்டி வரலாற்று புத்தகத்தில் இடம் பிடிப்பாரா என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

அவுஸ்திரேலிய அணியின் இடக்கை பட்ஸ்மேன் டேவிட் வார்னர் அடுத்த ஆண்டுடன் சர்வதேச கிரிக்கெட்டுக்கு முழுக்கு போட திட்டமிட்டுள்ளார். எனவே அவருக்கு இதுவே இறுதி உலகக் கிண்ணப் போட்டி என்பதில் சந்தேகமில்லை.

மேலும் வெளிநாட்டு வீரர்களில் ஒருவரான வார்னர் குறித்த போட்டியிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் முனைப்புடன் உள்ளார்.

தென்னாபிரிக்க அணியின் அதிரடி பட்ஸ்மனும் விக்கெட் கீப்பரான குயின் டான் டி காக்கு இந்த உலகக் கிண்ணப் போட்டியுடன் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து விடைபெறுவதாகவும், தொடர்ந்து 20 ஓவர் கிரிக்கெட் மற்றும் உலகம் முழுவதும் நடக்கும் லீக் போட்டிகளில் கவனம் செலுத்தப் போவதாகவும் கூறியுள்ளார்.

தென்னாபிரிக்க அணியின் உலகக் கிண்ண கனவு இந்த முறையாவது நிறைவேறுமா.

நடப்பு சம்பியனான இங்கிலாந்து அணியின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தவர். பென் ஸ்டோக்ஸ். இறுதி ஆட்டத்தில் 84 ரன்கள் குவித்து ஹீரோவாக ஜொலித்தார். ஒரு நாள் கிரிக்கெட்டில் இருந்து கடந்த ஆண்டு ஜூலை மாதம் ஓய்வை அறிவித்தார்.

இந்த உலகக் கிண்ண போட்டிக்கு பிறகு மீண்டும் ஒரு நாள் கிரிக்கெட்டுக்கு "குட்பாய்" சொல்லி விடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வங்காளதேச அணியின் கப்டனும், சுழற்பந்து வீசும் ஆல்-ரவுண்டருமான ஷகிப் அல்-ஹசனுக்கு இது 5 ஆவது மற்றும் கடைசி உலகக் கிண்ண போட்டியாகும். 2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ண போட்டிகளில் விளையாடிய வீரர்களில் இருவர் மட்டுமே தற்போதைய போட்டியிலும் நீடிக்கிறார்கள். அதில் ஒருவர் ஷகிப் அல்-ஹசன். மற்றொருவர் வங்காளதேச விக்கெட் கீப்பர் முஷ்பிகுர் ரஹிம்.

அத்துடன் 2025 ஆம் ஆண்டுடன் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து முழுமையாக ஓய்வு பெறப் போவதாக அறிவித்து இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (5-6)

# உலகக்கிண்ண தொடக்க விழா இன்று அகமதாபாத்தில் ஆரம்பம்



13 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி அகமதாபாத்தில் உள்ள நரேந்திரமோடி ஸ்டேடியத்தில் நாளை தொடங்கவுள்ளது. முதல் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் இங்கிலாந்து- நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன.

அதற்கு முன்பாக இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு அகமதாபாத்தில் பிர்மாண்டமான தொடக்க விழாவுக்கு இந்திய கிரிக்கெட் வாரியமும், ஐ.சி.சி.யும் ஏற்பாடு செய்துள்ளது.

இதில் லேஷர் ஷோ, வாணவேடிக்கை மற்றும் பாலிவுட் நட்சத்திரங்களின் கண்கவர் கலை நிகழ்ச்சி இடம்பெறுகிறது.

இந்தி நடிகர் ரன்வீர் சிங், நடிகை தமன்னா நடனமாடுகிறார்கள். ஆஷா போஸ்லே, ஸ்ரேயா கோஷல், அரிஜிங்சிங், சங்கர் மகாதேவன் உள்ளிட்டோர் இசை வெள்ளத்துக்கு மத்தியில் பாடல்கள் பாடி ரசிகர்களை குதூகலப்படுத்த உள்ளனர். மேலும் விழாவின் முக்கிய அம்சமாக 10 அணிகளின் கப்டன்கள் அறிமுக நிகழ்ச்சியும் இடம் பெறுகிறது.

தொடக்க போட்டிக்கான டிக்கெட் எடுத்துள்ள ரசிகர்கள் தொடக்க விழாவை காண அனுமதிக்கப்படுவார்கள். கிரிக்கெட் வாரிய நிர்வாகிகள் ஐ.சி.சி. நிர்வாகிகள், முன்னாள் வீரர்கள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# கரப்பந்தாட்ட இறுதிப்போட்டி பருத்தித்துறை முனை சம்பியன்

யாழ்.மாவட்ட ரீதியாக பருத்தித்துறை கோல்டன் பிளஸ் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் பருத்தித்துறை முனை அணி வெற்றி பெற்று சம்பியனாக தெரிவானது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் முதல் நான்கு இடங்களை வரணி ஜெயந்தன் அணி, பருத்தித்துறை முனை அணி, சாவற்கட்டு பிள்ளையார் அணி, மலை சந்தை மைக்கல் அணி என்பன அரையிறுதி ஆட்டங்களுக்கு தகுதி பெற்றன.

அரையிறுதி ஆட்டங்களில் வெற்றி பெற்ற பருத்தித்துறை முனை அணி மற்றும் மாலை சந்தை மைக்கல் அணிகள் மோதிய இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெற்றது.

இப் போட்டியின் நிறைவில் 11:11 புள்ளிகளை பெற்று இரு அணிகளும் சமநிலை பெற்றிருந்த நிலையில் பந்து பருத்தித்துறை முனை அணி பக்கம் இருந்த அடிப்படையில் அவ் அணி வெற்றி பெற்று சாம்பியனாக அறிவிக்கப்பட்டது. (5-6-60)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக் கழகங்களாக மாறும் கல்வியியற் கல்லூரிகள்

## அமைச்சரவையில் அங்கீகாரம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகளை பல்கலைக்கழகங்களாக தரமுயர்த்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.


இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இலங்கையில் அனைத்து ஆசிரியர்களையும் பட்டதாரிகளாக்கும் நோக்கில் தற்போது நடைமுறையிலுள்ள கல்வியியற் கல்லூரிகளை பல்கலைக்கழகப் பீடங்களாக உயர்த்துவதற்காக கடைப்பிடிக்க வேண்டிய நிர்வாக மற்றும் சட்டப் பொறிமுறைகள் தொடர்பாகப் பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக 2019.12.04 திகதி அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய மூத்த பேராசிரியர் குணபால நாணயக்கார தலைமையில் நிபுணத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவின் பரிந்துரைகள் தற்போதுள்ள 20 கல்வியியற் கல்லூரிகளில் 19 கல்லூரிகளை பல்கலைக்கழகமாக உயர்த்துவதற்கும், அத்துடன் இலங்கை கல்வியியற் பல்கலைக்கழகம் எனும் பெயரில் புதிய பல்கலைக் கழகமொன்றை நிறுவுவதற்கும் ஏதுவான சட்ட ஏற்பாடுகளை விதிப்பதற்கு புதிய சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# நீதித்துறைக்கு சாவுமணி அடிக்கப்பட்டுள்ளது

## சபையில் சிறிதரன் எம்.பி ஆவேசம்



(கொழும்பு)

நாட்டில் காணப்படும் பௌத்த பேரினவாதிகளால் நீதித்துறை செயலிழந்து இருக்கிறது என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற அமர்வில் நேற்று கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

ஒரு கட்டுமானப் பணியை கட்ட வேண்டாம் என நீதிபதி உத்தரவிட்ட போதும் பேரினவாத எண்ணங்களோடு சென்ற பிக்குமார்களும் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களும் அந்த விகாரைகளை கட்டி முடித்திருக்கிறார்கள்.

இதன் மூலமாக இலங்கையினுடைய நீதித்துறை செயலிழந்து இருப்பது தெரியவருகிறது. இந்த நாட்டில் இருக்கின்ற பேரினவாத செயற்பாட்டாளர்களுக்கு இந்த அரசாங்கம் ஒரு தகுந்த நடவடிக்கையை எடுக்கவில்லை என தெரிவித்துள்ளார். (நி-5)

# இணைய பாதுகாப்பு சட்டமூலத்திற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல்

(கொழும்பு)

இணைய பாதுகாப்பு சட்டமூலத்திற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் நேற்று பிற்பகல் மனு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த சட்டமூலத்தின் சில விதிகள் அரசியலமைப்பிற்கு இணங்கவில்லை என தெரிவித்து சமூக ஆர்வலரும் சுயாதீன ஊடகவியலாளருமான தரிந்து உடுவரகெதரவினால் இந்த மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்த இணைய பாதுகாப்பு சட்டமூலத்தின் விதிகள் பேச்சு மற்றும் கருத்து சுதந்திரம் உள்ளிட்ட சில அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாக மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே சட்டமூலம் நிறைவேற்றப்பட வேண்டுமாயின், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அல்லது சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என உத்தரவிடுமாறு கோரிக்கை முன்வைத்துள்ளார்.

சர்ச்சைக்குரிய சில அம்சங்களுக்காக விமர்சிக்கப்பட்ட போதிலும் மிகவும் விவாதிக்கப்பட்ட இணைய பாதுகாப்பு சட்டமூலம் நேற்றுக் காலை பாதுகாப்பு அமைச்சரால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. (நி-5)


# 31 ஆம் நாளில் நினைவுகூருகிறோம்



எமது பாடசாலையிலிருந்து ஓய்வு பெற்ற ஆசிரியை

திருமதி.இராசலட்சுமி பேராயிரம்

(பேராயிரம் ரீச்சர்)

அவர்களின் 31 ஆம் நாள் நினைவுநாளில் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் வேண்டி அவர் தம் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி!

(17317)

பாடசாலைச் சமூகம்

யா/பெரியபுலம் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்.


# பணவீக்கத்தை குறைப்பதில் முன்னேற்றம் கண்டுள்ள இலங்கை

## உலக வங்கி தெரிவிப்பு

(வோஷிங்டன்)

நெருக்கடியால் பாதிக்கப்பட்ட இலங்கை, பணவீக்கத்தை குறைப்பதில் முன்னேற்றம் கண்டுள்ளது என உலக வங்கி அறிவித்துள்ளது.

சுற்றுலா வருவாய் மற்றும் அதன் நாணயத்தின் மதிப்பீட்டின் மூலம் இலங்கை பயனடைந்துள்ளது. ஆகவே முன்னதாக 2024 இல் ஒரு விகிதம் என மதிப்பிடப்பட்ட பொருளாதாரம் 1.7 விகிதம் விரிவடையும் என எதிர்பார்ப்பதாகவும் உலக வங்கி அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும் இலங்கையின் கண்ணோட்டம் இன்னும் நிச்சயமற்ற தன்மையினால் மங்கலாக இருப்பதாகவும் பாதகமான அபாயங்கள் இருப்பதாகவும் கடன் மறுசீரமைப்பு மற்றும் வளர்ச்சியை மேம்படுத்தும் கட்டமைப்பு சீர்திருத்தங்களை தொடர்ந்து செயற்படுத்துவதைப் பொறுத்து நிலைமை மாறலாம் என்றும் உலக வங்கி அறிவித்துள்ளது. (நி-5)

# இராசிபலன்

04.10.2023
புரட்டாதி 17, புதன்கிழமை
பஞ்சமி முற்பகல் 09.59 மணிவரை

ரோகினி முன்னிரவு 11.24 மணிவரை
சுபநேரம்-4.32-6.02 மணிவரை
இராகுகாலம்-12.02-01.32 மணிவரை

சந்திராஷ்டமம்-
சித்திரை, சுவாதி.

வளவன்



**மேஷம்**
துணிவும் தன்நம்பிக்கையும் அதிகரிக்கும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.



**கடகம்**
விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.



**துலாம்**
சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.



**மகரம்**
பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு, வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும்.



**ரிஷபம்**
தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.



**சிம்மம்**
குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், சிறப்பான நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பிர்கனள்.



**விருச்சிகம்**
வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், எடுத்த காரியம எளிதில் கைகூடும்.



**கும்பம்**
உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், எண்ணங்கள் எளிதில நிறைவேறும்.




**மிதுனம்**
பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உறவினர்கள் நலன் கருதிய சுப விரயங்கள் ஏற்படலாம்,



**கன்னி**
செய்தொழிலில் இருந்த எதிர்ப்புகள் அகலும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், திடீக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ரோக பயமுண்டு.



**தனுசு**
இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர் உங்களுக்கு பின்னணியில் செயற்படுவர்.



**மீனம்**
வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தினர் உங்களின் குணமறிந்து நடந்து கொள்வர், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

திட்டமிட்டு வாழாதவன் தன் வாழ்க்கையை அழிக்கத் திட்டமிடுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டத்திற்கு ஆதரவுகோரி சுன்னாகத்தில் துண்டுப்பிரசுரம்



(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு நீதிபதி விவகாரத்தில் கண்டனத்தை வெளிப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணத்தில் மேற் கொள்ளப்படவுள்ள மனித சங்கிலி போராட்டத்திற்கு ஆதரவு கோரி சுன்னாகம் பகுதியில் நேற்று காலை துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள் கலந்து கொண்டு துண்டுப்பிரசுரங்களைவிநியோகித்தனர்.

இன்று காலை 9 மணிக்கு மருதனார்மடத்தில் ஆரம்பித்து யாழ்ப்பாண நகர் வரையில் நீளுகின்ற ஓர் மனிதசங்கிலி போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

குறித்த போராட்டத்திற்கு ஆதரவாக இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசிய கட்சி, தமிழ் மக்கள் விடுதலைக் கழகம், தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி என்பன அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(5-6-33-104)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழிநுட்பவியல் கற்கைநெறிக்கான சான்றிதழைப் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறிகள் மாவட்ட அலுவலகம் மற்றும் மானிப்பாய் பயிற்சி நிலையங்களில் நடைபெறும்.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதியன்று 16-25 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

க.பொ.த(சா/த) பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 46 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த(உ/த) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியும் இருக்க வேண்டும்.

இக்கற்கை நெறிகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள், தொலைபேசி இலக்கம் மற்றும் பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, மாவட்ட அலுவலகம், இல.44, சோமசுந்தரம் அவனியு, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 2023.10.20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 021-2222383 அல்லது 071-4553772 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என யாழ். தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை மாவட்ட முகாமையாளர் இ.திருமுருகன் அறிவித்துள்ளார். (5-6)

# வயற்காணிகளில் குழாய்கள் பொருத்தும் வேலைத்திட்டம்

(கரணவாய்)

கப்பூது மற்றும் துன்னாலை தெற்கு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அணைக்கட்டு திருத்த வேலைகளின் போது வயற்காணிகளில் சேரும் மேலதிக நீரினை வெளியேற்றுவதற்காக குறிப்பிட்ட சில இடங்களில் குழாய்கள் வைக்கும் வேலையானது எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

குறித்த பிரதேசங்களில் உள்ள விவசாயிகள் கமக்கார அமைப்பினருடன் கலந்துரையாடி குழாய்கள் வைப்பதற்கு பொருத்தமான இடங்களை தெரிவு செய்யுமாறு கரவெட்டி விவசாய அபிவிருத்தி அதிகாரி அறிவித்துள்ளார். (5-6-60)

# சாவகச்சேரியில் பழைமை வாய்ந்த வேப்பமரம் முறிந்து விழுந்துள்ளது



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் ஏ9வீதியை மிக அண்மித்து காணப்பட்ட 100 வருடங்கள் பழைமை வாய்ந்த வேப்பமரம் ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை காலை முறிந்து விழுந்துள்ளது.

குறித்த மரம் மின்சார வயர்களை அறுத்துக் கொண்டு ஏ9 வீதியில் விழுந்த போதிலும் சம்பவ நேரத்தில் அவ் வீதி வழியாக எவரும் பயணிக்காமையால் உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளது.

அத்துடன் மர நிழலில் காணப்பட்ட லொத்தர் டிக்கெட் விற்பனை நிலையம், மோட்டார் சைக்கிள் ஆகியன பகுதியளவில் சேதமடைந்துள்ளன. மின்சார தூண்களும் உடைந்து சேதமடைந்துள்ளன.

இது தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுத்த சாவகச்சேரிப் பொலிஸார் உரிய திணைக்களங்களுக்குத் தெரியப்படுத்தி மரத்தை அப்புறப்படுத்தி சிறிது நேரத்திலேயே போக்குவரத்தினை சீர்ப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6-30-33)

# சட்டவிரோதமான முறையில் மாடுகளை கடத்திய நபர் கைது

(சாவகச்சேரி)

பழைய அனுமதிப் பத்திரத்தில் மாற்றத்தை ஏற்படுத்திப்பட்டாரகவாகனத்தில் மாடுகளை கடத்திய நபர் ஒருவர் நேற்று முன்தினம் திங்கட் கிழமை சங்குப்பிட்டி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பூநகரிப் பகுதியில் இருந்து சங்குப்பிட்டி ஊடாக யாழ்ப்பாணத்திற்கு மாடுகள் கடத்தப்பட்ட நிலையில் சங்குப்பிட்டிப் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் சோதனை செய்து மோசடியில் ஈடுபட்ட சாரதியை கைது செய்து சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதன்போது பட்டாரக வாகனத்தில் கடத்தப்பட்ட 5மாடுகளும் மீட்கப்பட்டதுடன்-வாகன சாரதியை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்து வதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (5-6-30)

# இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அமரர். இராமு அருள் நேசன் ஞாபகார்த்தமாக திருமதி. மீரா அருள்நேசன் அனுசரணையுடன் அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் கல்விச் சேவைக்குழு இணைந்து நடத்தும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு இன்று புதன்கிழமை பகுதி 01 இற்கான கருத்தரங்கும் நாளை வியாழக் கிழமை பகுதி 02 இற்கான கருத்தரங்கும் சனசமூக நிலைய மண்டபத்தில் பி.ப 4 மணி தொடக்கம் பி.ப 7 மணி வரை ஓய்வு நிலை ஆசிரியர் சி. கருணாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியர் ப. புளோரன்ஸ் வளவாளராக கலந்து கொள்ளவுள்ளார். (5-6)

# அராஜக முறையை முன்னெடுக்கும் செயற்பாட்டை அரசாங்கம் செய்கிறது

## முன்னாள் மேஜர் மணிவண்ணன்

(அராலி)

மக்களுடைய கருத்து சுதந்திரம் என்பது இலங்கையில் அடிப்படை உரிமையாக அரசியல் அமைப்பிலே உட்புகுத்தப்பட்டிருக்கின்ற ஒரு விடயம். அதை கேள்விக்கு உட்படுத்துகின்ற விதமாக புதிய சட்டம் கொண்டுவரப்படுகிறது என தமிழ் தேசியக் கூட்டணியின் உறுப்பினரும், முன்னாள் யாழ். மாநகர முதல்வருமான சட்டத்தரணி வி.மணி வண்ணன் தெரிவித்தார்.

ஊடக மையத்தில் நேற்று காலை நடைபெற்ற ஊடகசந்திப்பிலே அவர் இதனை தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், இந்த காலகட்டத்திலே இரண்டு விதமான சட்டங்களை அரசாங்கம் முன்மொழிந்து அதை நிறைவேற்றுவதற்கு துடித்துக் கொண்டிருக்கிறது. ஒன்று பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் ஆன்லைன் என்று சொல்லப்படுகின்ற நிகழ்நிலைக்காப்பு சட்டம் எனும் இன்னுமொருசட்டத்தையும் கொண்டு வர அரசாங்கம் நினைக்கிறது. அரசு மீது இருக்கக்கூடிய விமர்சனங்களை பொதுமக்கள்முன்வைக்கவிடாமல் தடுக்கின்ற ஒரு மோசமான ஒரு சட்ட ஏற்பாடாக தான் நிகழ்நிலை காப்பு சட்டம் உள்ளது.

இதுவரை காலமும் கருத்து சுதந்திரத்தின் ஊடாக ஒருவர் பாதிக்கப்பட்டால் நட்ட ஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்கின்ற உரிமை இருந்த நிலையில் இன்று அந்த சட்ட ஏற்பாடுகள் ஊடாக தண்டிக்கப்படுகின்ற ஒரு நிலைமையையும் சிறைச்சாலைகளுக்கு அனுப்பப்படக்கூடிய நிலைமையில் ஏற்படுத்தப்பட இருக்கின்றது.

மேலும் அரசாங்கம் தங்களுடைய அராஜகங்களை முன்னெடுப்பதற்கான கவசங்களாக இந்த இரண்டு சட்டங்களையும் உபயோகிப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருப்பதினால் இதனை சட்டமாக நிறைவேற்றப்படுவதை தடை செய்ய வேண்டும் என தெரிவித்தார்.(5-6-104)

# இரண்டு கால்களுடன் பிறந்த கன்றுக்குட்டி



(சாவகச்சேரி)

சாவகச்சேரி கச்சாய் வீதி உப்புக்கேணி ஒழுங்கையில் உள்ள சந்திரகுமார் என்பவரின் வளர்ப்பு மாடு நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இரண்டு கன்றுகளை ஈன்றதுடன் அதில் ஒரு கன்று இரண்டு கால்களுடன் மாத்திரம் பிறந்துள்ளது.

இதன்போது முதலில் ஈன்ற கன்று ஆரோக்கியமாக இருப்பதுடன் இரண்டாவதாக பிரசவித்த இரண்டு கால்களுடன் மாத்திரம் பிறந்த கன்று பிறந்து சிறிது நேரத்தில் உயிரிழந்துள்ளது.மேற்படி மாட்டுக் கன்று வெறு மனே இரண்டு கால்களுடன் மாத்திரம் பிறந்துள்ள நிலை யில் அதற்கு தலை இருக்க வில்லை என்பதுடன் பிறந்து சிறிது நேரம் அதன் உடலில் உயிர்த் துடிப்பு இருந்ததாகவும் உரிமையாளர் தெரிவித்துள்ளார். அத்துடன் உரிமையாளரால் இது தொடர்பாக கால்நடை வைத்திய அதிகாரி பணிமனைக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு நீதிபதியே பொறுப்பேற்க வேண்டும்

## பாராளுமன்றில் நீதி அமைச்சர்

(கொழும்பு)

அழுத்தங்கள் காரணமாக ஏதேனும் பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்கும் பட்சத்தில், அழுத்தங்களை பிரயோகித்த நபருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான அனைத்து அதிகாரங்களும் தம்வசம் காணப்பட்ட தருணத்திலும் அதனை செய்யாமைக்கான பொறுப்பை முல்லைத்தீவு முன்னாள் நீதிபதி ரி.சரவணராஜாவே ஏற்றுக்கொள்ள வேண்டும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்திற்கான பொறுப்பை அரசாங்கத்தின் பக்கம் திருப்புவதை நிறுத்த வேண்டும்.

அச்சுறுத்தல்களை பிரயோகித்தவர்களுக்கு எதிராக பிடி



யாணை பிறப்பிக்காதது ஏன் என்ற கேள்வி எழுகின்றது எனவும் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# சீரற்ற காலநிலையால் 25,863 பேர் பாதிப்பு

(கொழும்பு)

நிலவும் சீரற்ற வானிலை காரணமாக 6 ஆயிரத்து 250 குடும்பங்களைச் சேர்ந்த 25 ஆயிரத்துத் 863 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் புதுப்பிக்கப்ப ட்டஅறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, மண்மேடு சரிவு மற்றும் பலத்த காற்று என்பவற்றினால் இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, மாத்தறை, கம்பஹா, காலி, புத்தளம் மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.(நி-5)

# மசகு எண்ணெய் விலையில் வீழ்ச்சி

(வோஷிங்டன்)

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலையில் சிறிய அளவிலான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்று 91 அமெரிக்க டொலரால் வீழ்ச்சியடைந்த நிலையில், ஒரு வாரத்திற்கு பின்னர் இந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இத ற்கமைய, நேற்று முன்தினம் டபிள்யு ரீ. ஐ மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 88.51 அமெரிக்க டொலராக காணப்படுகின் றது. அத்துடன், ப்ரண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 90.71 ஆக விற்பனை செய்யப்படுகின்றது. (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 200 | 150 | 160 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 400 | 600 |
| தக்காளி | 120 | 100 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 140 | 150 | 160 |
| கோவா | 200 | 150 | 180 | 200 |
| கரட் | 300 | 320 | 320 | 400 |
| பூசணி | 80 | 80 | 60 | 80 |
| புடோல் | 80 | 100 | 100 | 160 |
| வாழைக்காய் | 200 | 180 | 180 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 250 | 320 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 220 | 250 |
| பாகற்காய் | 350 | 400 | 350 | 400 |
| வெண்டக்காய் | 100 | 120 | 100 | 250 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 150 | 200 |
| பயற்றங்காய் | 250 | 180 | 180 | 200 |
| லீக்ஸ் | 200 | 150 | 150 | 200 |
| பீற்றூட் | 140 | 140 | 150 | 200 |
| கறிமிளகாய் | 250 | 350 | 250 | 400 |
| முருங்கைக்காய் | 200 | 100 | 100 | 120 |
| போஞ்சி | 300 | 400 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 180 | 140 | 120 | 150 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 80 | 100 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 1200 | 1600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-90 |
| இராசவள்ளி | 300 | 450 | 400 | 550 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 300 | 400 |
| முள்ளங்கி | 80 | 120 | 140 | 150 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 100 | 60 |
| வல்லாரை | 40 | 160 | 50 | 60 |
| ஈரப்பலா | 80 | 80 | 120 | 150 |

# சிறுவர் பாதுகாப்பு தொடர்பான முறைப்பாடுகளுக்கு தீர்வில்லை

(கொழும்பு)

சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் கடந்த இரண்டு ஆண்டுகளில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 47 சதவீதமான முறைப்பாடுகளுக்கு இன்னும் தீர்வு வழங்கப்படவில்லையென கணக்காய்வு அறிக்கையின் மூலம் தெரியவந்துள்ளது.

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கடந்த இரண்டு ஆண்டுகளில் (2021-2022) கிடைக்கப்பெற்ற சிறுவர் பாதுகாப்பு தொடர்பான 10 ஆயிரத்து 691 முறைப்பாடுகளில் 47 சதவீதமான முறைப்பாடுகளுக்கு இன்னும் தீர்வு வழங்கப்படவில்லையென தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் புலனாய்வுப் பிரிவு, மனநலப் பிரிவு, சட்டப் பிரிவு ஆகியவற்றுக்குக் கிடைத்த முறைப்பாடுகளில் 50 சதவீதத்துக்கும் அதிகமானவை இன்னும் விசாரணையில் இருப்பதாகவும் அவ்வறிக்கை மூலம் தெரியவந்துள்ளது. (நி-5)


உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரின் உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு:

தொலைபேசி:

076 097 3127

021 221 7603

Viber/ Whatsapp: 076 636 3378

E.mail:

Valampurii@yahoo.com



சேவைநயப்பும் மணிவிழா வாழ்த்தும்

திருமதி. செந்தில்மதி சுரேந்திரன்

(ஆரம்பக்கல்வி ஆசிரியை)

யா/ஸ்ரீ சோமாஸ்கந்த இந்து ஆரம்ப பாடசாலை

சேவை விபரம்

01.09.1992–31.08.2010 வரை

யா/சிறுப்பிட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை

01.09.2010–03.10.2023 வரை

யா/ஸ்ரீசோமாஸ்கந்த இந்து ஆரம்ப பாடசாலை



அகவை அறுபதில்
ஆசிரியர் பணியிலிருந்து
ஓய்வு பெறும் எமது சக ஆசிரியரின்
ஓய்வுக்காலம் சீரும் சிறப்புமாக இருக்க
மனதார வாழ்த்துகின்றோம்


வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக் கழகம்

யா/ஸ்ரீசோமாஸ்கந்த இந்து ஆரம்ப பாடசாலை, புத்தூர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாரதம்

# இந்தியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்



(டில்லி)
இந்தியாவின் டில்லி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

நேற்று 2.30 மணியளவில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நிலநடுக்கத்திற்கான தேசிய மையத்தின் ஆரம்ப மதிப்பீடுகளின்படி, நிலநடுக்கத்தின் ஆழம் 5 கி.மீ மற்றும் ரிக்டர் அளவு 6.2 ஆக உள்ளது.

40 விநாடிகளுக்கு மேலாக நீடித்த இந்த நிலநடுக்கத்தால் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

டில்லி மட்டுமின்றி வட இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரபிரதேசத்தின் லக்னோ, ஹாபூர், அம்ரோஹா ஆகிய இடங்களிலும் நில அதிர்வுகள் உணரப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை நேபாளம், சீனா ஆகிய நாடுகளிலும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. (நி-5)

# மலேரியாவுக்கு எதிர

# உலக சுகாதார மை

(வோஷிங்டன்)
**உலகம் முழுவதும் ஆண்டுதோறும் 20 கோடி பேர் கிறார்கள். அதில் 4 லட்சம் உயிர்களைப் பறிக்கும் மலே எதிராக முதல் தடுப்பூசியை உலக சுகாதார மையம் அங்கீ RTS,S/AS01 என்று பெயரிடப்பட்டுள்ள இந்த தடுப்பூசி இ உயிரிழப்புகளைத் தடுக்கும் என உலக சுகாதார அ வித்துள்ளது.**

மலேரியா கொசுக்கடியால் ஏற்படும் ஒரு நோய். இந்த நோயால் ஆண்டுதோறும் 4 லட்சம் பேர் உயிரிழக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் ஆபிரிக்க குழந்தைகள் என்பது வேதனைக்குரிய விடயம்.

2019 ஆண்டு மலேரியா தடுப்பூசி செலுத்தும் பணி பரிசோதனை அடிப்படையில் முன்னோடித் திட்டமாக ஆபிரிக்காவின் கானா, கென்யா, மலாவி போன்ற நாடுகளில் அமுல்படுத்தப்பட்டது. இதுவரை 2 மில்லியன் டோஸ் வழங்கப்பட்டுள்ளன. இந்த தடுப்பூசியை ஜிஎஸ்கே மருந்து நிறுவனம் தயாரித்துள்ளது.

இது குறித்து உலக சுகாதார மையத் தலைவர் டெட்ரோஸ் அதோனம் கெப்ரியேசஸ் கூறியதாவது, ஆபிரிக்க நாடுகளில் பரிசோதனை அடிப்படையில் இரண்டு ஆண் டுகளாக மலேரியா தடுப்பூசி செலுத்தப்பட்டு வந்ததில் நல்ல பலன் கிடைத்துள்ளது.

இதன் அடிப்படையில் இ த் தடுப்பூசியை உலகம் முழு வதுமே பரவலாகப் பயன்படுத்த உலக சுகாதார மையம் அனு மதிக்கிறது.

சப் சஹாரா ஆபிரிக்க

# 41 கனேடிய ராஜதந்திரிகளை மீள அழைக்குமாறு இந்தியா அறிவிப்பு

(டில்லி)
கனேடிய ராஜதந்திரிகளை மீள அழைத்துக் கொள்ளுமாறு இந்தியா அறிவித்துள்ளது. இந்தியாவில் கடமையாற்றி வரும் சுமார் 41 ராஜதந்திரிகளை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னதாக மீளவும் அழைத்துக் கொள்ளுமாறு இந்திய அரசாங்கம் கோரியுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவிற்கும் கனடாவிற்கும் இடையில் கடுமையான ராஜதந்திர முரண்பாட்டு நிலைமை நீடித்து வருகின்றது.

அண்மையில் கனடாவின் சீக்கிய மதத்தலைவர் ஹார்தீப் சிங் நிஜ்ஜார் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த படுகொலை சம்பவத்தின் பின்னணியில் இந்திய முகவர்கள் இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டது. கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோவும் இந்த குற்றச்சாட்டை சுமத்தியிருந்தார். இதனைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையிலான ராஜதந்திர முரண்பாட்டு நிலைமை உக்கிரமடைந்துள்ளது.

குறித்த ராஜதந்திரிகளை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னதாக அழைக்க தவறினால் அவர்களுக்கு ராஜதந்திர சலுகைகள் தொடர்ந்தும் வழங்கப்படாது என இந்தியா எச்சரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் சுமார் 62 கனேடிய ராஜதந்திரிகள் கடமையாற்றி வரும் நிலையில் இவர்களில் 41 பேரை மீள அழைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே முக்கிய இந்திய ராஜதந்திரிகள் சிலரை கனடா திருப்பி அனுப்பி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# நடுவானில் திடீ 6 பேர் உடல்

(ஜிம்பாவே)
ஜிம்பாவே நாட்டில் நடு வானில் திடீரென விமானம் வெடித்த விபத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தியாவில் முரோவா நகரில் உள்ள வைர சுரங்கத்தின் உரிமையாளரான ஹர்பால் ரந்தாவர், தனது மகன் மற்றும் நண்பர்களுடன் தலைநகர் ஹராரேவில் இருந்து முரோவா நகருக்கு தனி விமானத்தில் சென்றிருந்தார்.

இதையடுத்து விமானம் முரோவா நகர் அருகே சென்று கொண்டு இருந்த போது, திடீரென ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக நடு வானி

# 980 கோடி இலங்கை ரூபா செலவில் ஜப்பான் உருவாக்கும் பாரிய ரோபோ



(டோக்கியோ)
ஜப்பானிய நிறுவனம் ஒன்று 30 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (சுமார் 980 கோடி இலங்கை ரூபாய்) செலவில் பாரிய ரோபோவை உருவாக்கி வருகிறது.

இந்த ரோபோவுக்கு ஆர் காக்ஸ் என்று பெயர். ஆர் காக்ஸ் 4.5 மீற்றர் உயரமும் 3.5 தொன் எடையும் கொண்டது. ஒரு நபர் ரோபோவிற்குள் நுழைய முடியும் மற்றும் ரோபோவிற்குள் இருக்கும் கட்டுப்பாட்டு அமைப்பு, உள்ளே இருக்கும் நபரை ஆர்காக்ஸின் மூட்டுகளை கட்டுப்படுத்த

இம்மாத இறுதியில் ஜப்பானில் நடைபெறும் கண்காட்சியில் ஆர் காக்ஸ் காட்சிக்கு வைக்கப்படும்.

இரண்டு முகங்கள் கொண்டது நான்கு சக்கரம் கொண்ட ஆர்காக்ஸ் இரண்டு முகங்கள் கொண்டது. இது ரோபோவாகவோ அல்லது காராகவோ செயற்பட முடியும். காராக செயற்படும் போது ஆர்காக்ஸ் மணிக்கு 10 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கும் திறன் கொண (நி-5)

# அமெரிக்காவில் தி மிகப்பெரிய அம்




(வோஷிங்டன்)
அமெரிக்காவின் மேரி லேண்ட் ணத்தில் 19 அடி உயர அம்பேத்கர் எதிர்வரும் 14 ஆம் திகதி திறக்கப்பட உ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோன முதல் தடுப்பூசி
# மையம் பச்சைக்கொடி

பேர் பாதிக்கப்படு
மலேரியா நோய்க்கு
அங்கீகரித்துள்ளது.
பூசி இனி மலேரியா
ர அமைப்பு தெரி




டு ஆண்
தடுப்பூசி
ல் நல்ல
.
பில் இந்
கம் முழு
ன்படுத்த
ம் அனு
ஆபிரிக்க


நாடுகளில் உள்ள குழந்தைகளுக்கு 2 வயதுக்குள் 4 தவணைகளாக இந்தத் தடுப்பூசியை செலுத்த உலக சுகாதார அமைப்பு பரிந்துரைக்கிறது.

ஒவ்வொரு இரண்டு நிமிடமும் உலகில் ஒரு குழந்தை மலேரியாவில் உயிரிழக்கும் சூழல் உள்ளது.

அதுவும் பெரும்பாலான குழந்தைகள் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். 2019 ஆம் ஆண்டு உலக சுகாதார மையம் எடுத்த கணக்கின்படி, உலகளவில் அந்த ஆண்டு மலேரியாவில் உயிரிழந்த குழந்தைகளில் கால்வாசி பேர் நைஜீரியாவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவித்தார்.

உலக சுகாதார மையத்தில் மலேரியா ஒழிப்பு திட்ட இயக்குநர் பெட்ரோ அலன்சோ, எம்ஆர்என்ஏ தொழில்நுட்பத்தைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்த தடுப்பூசி அறிவியல் ரீதியாக மாபெரும் வெற்றி என சுட்டிக்காட்டினார். (நி-5)

## இயற்பியலுக்கான நோபல் பரிசு
# அமெரிக்கா, ஜேர்மனி, சுவீடன் நாட்டு விஞ்ஞானிகளுக்கு




(ஸ்டாக்ஹோம்)

2023ஆம் ஆண்டின் இயற்பியலுக்கான நோபல் பரிசு மூவருக்கு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த மூவரும் அமெரிக்கா, ஜேர்மனி, சுவீடன் நாடுகளை சேர்ந்தவர்கள் ஆவர்.

ஒவ்வொரு ஆண்டும் மருத்துவம், இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் என ஆறு துறைகளில் நோபல் பரிசு வழங்கப்பட்டு வரும் நிலையில் இந்த ஆண்டுக்கான நோபல் பரிசுகள் நேற்று முன்தினம் முதல் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் நேற்று இயற்பியலுக்கான நோபல் பரிசு அமெரிக்கா, ஜேர்மனி, சுவீடன் நாடுகளை சேர்ந்த 3 விஞ்ஞானிகளான பியரி அகோஸ்தினி, பெரங்க் க்ரவுஸ், ஆனி ஹூலியர் ஆகியோர்கள் பெறுகின்றனர்.

இந்த மூவருக்கும் நோபல் பரிசுடன், 8 கோடி ரூபாய்க்கான ரொக்கப் பரிசும் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# திடீரென வெடித்த விமானம்
# டல் கருகி உயிரிழப்பு



லேயே விமானம் வெடித்துச் சிதறியது. இதில் விமானத் தில் இருந்த 6 பேரும் உடல் கருகி உயிரிழந்தனர். (நி-5)

# உலகில் முதன் முதலாக டிஜிட்டல் கடவுச்சீட்டை அறிமுகப்படுத்திய பின்லாந்து




(எல்சிங்கி)

ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள நாடான பின்லாந்து உலகிலேயே முதன்முதலாக ஒரிஜினல் கடவுச்சீட்டுகளுக்கு பதிலாக டிஜிட்டல் கடவுச்சீட்டை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஸ்மார்ட் போன் செயலி அடிப்படையில் செயற்படும் இந்த டிஜிட்டல் கடவுச்சீட்டை பயன்படுத்துவதன்மூலம் விமான நிலையத்தில் வரிசையில் நிற்கும்நேரம்வெகுவாக குறைக்கப்பட்டு பயணிகளுக்கு நேரம் மிச்சமாகும் என்று கூறப்படுகிறது.

ஆவணங்கள் சரிபார்ப்பு மற்றும் மனித தொடர்புகளின் தேவையைக் குறைப்பதன் மூலம் பயணத்தை வேகமாகவும் மென்மையாகவும் மேலும் பாதுகாப்பானதாகவும் மாற்றுவதைத் இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. பின் ஏர், பின் னிஷ் பொலிஸ் மற்றும் பின் ஏவியா விமான நிலைய ஆபரேட்டருடன் இணைந்து கடந்த ஓகஸ்ட் 28 ஆம் திகதி இந்த திட்டத்தை பின்லாந்து அரசு தொடங்கி உள்ளது.

இந்த திட்டம் ஹெல்சின்கி நகரில் இருந்து இங்கிலாந்து திரும்பும் சில பின் ஏர் விமான பயணிகளிடம் மட்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற் காக பின் டி.சி.சி பைலட் என்ற செயலி அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இதனை பதிவிறக்கம் செய்து பயணிகள் தங் கள் முக அங்கீகாரம் மற்றும் பயோமெட்ரிக் தரவுகளை சரிபார்க்க வேண்டும். பின்னர், பின்லாந்து எல்லைக் குட்பட்ட பொலிஸாருக்கு செயலி மூலம் இந்த தகவல்களை அனுப்ப வேண்டும்.

பயணிகள் தங்களது கடவுச்சீட்டுத் தகவல்களை ஸ்மார்ட் போனில் சேமித்து வைத்து, தேவையான இடங்களில் உடனடியாக பயன்படுத்திக் கொள்ள உதவும். இதற்காக தனியாக கடவுச்சீட்டை உடன் எடுத்துச் செல்ல தேவை இருக்காது. இந்த திட்டம் சோதனை அடிப்படையில் 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரை செயற்படுத்தப்பட உள்ளது. அதன் பின்னர், இத்திட்டத்தில் உள்ள நிறை, குறைகளை ஆராய்ந்து, நாடு முழுவதும் செயற்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்படும் என்று பின்லாந்து அரசு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் போலந்து, தென் கொரியா, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற பிற நாடுகளும் இதே போன்ற முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன. எதிர்காலத்தில் இந்த டிஜிட்டல் கடவுச்சீட்டு எல்லா நாடுகளிலும் பிரபலமாகும் என்று தெரிகிறது.

இந்த டிஜிட்டல் கடவுச்சீட்டில் இருக் கும் ஒரு ஆபத்து என்னவென்றால், ஹேக்கர்கள் கடவுச்சீட்டில் தரவுகளைத் திருடி அதை தவறாகப் பயன்படுத்த வாய்ப்பு உள்ளது. இதனை எப்படி தடுப்பது என்று பின்லாந்து நிபுணர்கள் ஆய்வு செய்து வருகின்றனர். (நி-5)

# ல் திறக்கப்படவுள்ள
# அம்பேத்கர் சிலை



ண்ட் மாகா
த்கர் சிலை
பட உள்ளது.

மேரிலேண்ட் மாகாணத்தின் அக்கோகீக் நகரத்தில் அம்பேத்கர் சர்வதேச மையத்துக்கு சொந்தமான 13 ஏக்கர் நிலத்தில் இந்தச் சிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிலைக்கு ‘சமத்துவத்தின் சிலை" என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்தியாவுக்கு வெளியே இருக்கும் அம்பேத்கர் சிலைகளில் மிக உயரமான சிலை இதுவாகும்.

எதிர்வரும் 14 ஆம் திகதி இந்த 19 அடி உயர அம்பேத்கர் சிலையும் திறக்கப்பட உள்ளது. இந்த சிலை திறப்பு நிகழ்வில் அமெரிக்கா மற்றும் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பிரமுகர்கள் கலந்து கொள்கின்றனர்.

இந்த நினைவுச்சின்னம் அம்பேத்கரின் போதனைகளை பரப்பவும் சமதத்துவம் மற்றும் மனித உரிமைகளின் சின்னமாக விளங்க உதவும் என்று ஏஜசி தெரிவித்துள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு விரயமாதலும் வீணாதலும்: உலகளவிலான விழிப்புணர்வுக்கான அழைப்பு



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

உணவு உற்பத்தி பெருகி வரும் உலக சனத்தொகைக்கு போதாதென்ற கணிப்பினூடாக உற்பத்தியாகும் உணவினை விரயமாகாமலும் கழிவாக வீணாகாமலும் வினைத்திறனாக பயன்படுத்தல் வேண்டும். செப்டெம்பர் 29 உணவு விரயமாக்கலும் வீணாதலுக்குமான விழிப்புணர்வுக்கான அழைப்பாக உலகளவில் கொண்டாடப்பட்டிருக்கின்றது. உலகளவில் இதற்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதற்கு நியாயமான பலகாரணங்கள் உண்டு. அதில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் 2018 தகவலின் படி 2050 ஆம் ஆண்டளவில் உலகசனத்தொகை 10 பில்லியன் மக்கள் ஆகி அதில் 70 சதவீதம் நகர்ப்புறங்களில் குடிபெயர்ந்து விடுவர்.

இதனுடன் சேர்ந்து வருமானத்தின் அதிகரிப்பும் வாழ்க்கைத் தர மேம்பாடும் இணைந்து உணவுக்கான தேவையை அதிகரித்துவிடும் என்பதற்கப்பால் குறிப்பாக உணவின் தெரிவை அதன் உண்ணும் முறைமையை மாற்றுவதோடு உணவுக்கான அதிலும் பழுதடையக்கூடிய உணவுப்பொருட்களின் கிடைக்கும் தன்மையையும் மாற்றிவிடும் என்கின்றனர்.


இறுதியான தகவலின் படி உலகளவில் 3 மில்லியன் மக்கள் ஆரோக்கியமான உணவு கிடைக்காது வாழ்கின்றார்கள் எனவும் ஏறக்குறைய 690 மில்லியன் மக்கள் பசிபட்டினியினால் பாதிக்கப்பட்டிருப்பதனால் அவர்களுக்கு நுண்ணூட்டச்சத்து குறைபாடு அதிகளவில் காணப்படுவதாகவும் இவற்றின் தாக்கம் உணவு சார்ந்த வயிறூதல் மற்றும் உடல் பருத்தல் மற்றும் உணவு சார்ந்த தொற்றாநோய்கள் ஏற்படுவதாகவும் குறிப்பாக இதய நோய், பக்கவாதம் மற்றும் நீரிழிவு என்பன அதிகளவில் உருவாகுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

இதைவிட ஏறக்குறைய 600 மில்லியன் மக்கள் உணவுடன் தொடர்பான நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் உலகளவில் வருடத்திற்கு 400,000 இறப்புக்கள் ஏற்படுவதாகவும் பாதுகாப்பற்ற உணவுகள் மனிதனுக்கு சவாலாக மாறியுள்ளதுடன் அவர்களது வருவாய் மற்றும் சுகாதாரத்தில் அதிகளவு பாதிப்பினை ஏற்படுத்திவிடுகின்றன.

இந்த நிலைமை குறிப்பாக வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களையும் வருமானம் குறைந்த குடும்பங்களையும் அதிகம் பாதிக்கின்றதென அறியப்படுகின்றது. மேலும் இது நடுத்தர குடும்ப மக்களையும் அதிலும் பெண்கள் மற்றும் குழந்தைகளையும் இன்னும் போர் நடக்கின்ற நாடுகளில் இடம்பெயர்பவர்களையும் புலம்பெயர்ந்தவர்களையும் அதிகம் பாதிக்கின்றது.

தற்போதைய உணவு உட்கொள்ளும் முறைமையில் உணவு சார்ந்த சுகாதாரத்திற்கு அதிகம் செலவாவதுடன் 2030 ஆம் ஆண்டளவில் தொற்றா நோய்களும் (Non communicable diseases) அதிகரித்து அநாவசிய இறப்புக்கள் ஏற்படும் போது உணவுசார் சுகாதாரத்திற்கு 1.3 ரில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படும் எனவும் இது சராசரி தேவையைவிட மிக அதிகம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



மாறாக தற்போதைய உணவு உட்கொள்ளும் முறைமையுடன் நேரடிதொடர்புள்ள பச்சைவீட்டு வாயுக்களின் வெளியேற்றம் உணவுசார் சமூக செலவினை 1.7 ரில்லியன் (17,000,000,000,000) டொலராக அதிகரிக்கும். ஐரோப்பாவில் உணவுக் கழிவிலிருந்து 254 மில்லியன் தொன் காபனீரொட்சைட்டு சூழலுக்கு வெளியிடப்படுகின்றது என கணித்திருக்கின்றனர்.

மேலே கணக்கிட்டதன் படி உலக உணவு வலையமைப்பிலிருந்து வளர்ச்சியடையும் உலக சனத்தொகைக்கு உணவளிப்பதாயின் 2050 ஆம் ஆண்டளவில் கடினமாயிருப்பதுடன் அதன் பின்னர் நிலைமை மிகவும் பாரதூரமான நிலைக்கு செல்லும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. ஆனாலும் வழமையான வர்த்தக நிலைமையில் இருக்கின்ற இயற்கை வளங்களின் அடிப்படையிலும் சுற்றுச்சூழலிலேற்படும் தாக்கத்தினாலும் உற்பத்தி அதிகரித்து உலக உணவு தொகுதி ஏனைய தொழினுட்பங்களுடன் இணைக்கப்படும். இவற்றுள் காலநிலை மாற்றத்தினால் ஏற்படப்போகும் பாதிப்பை எதிர்கொள்ளவும் உற்பத்தியை தக்கவைக்கவும் வேண்டியிருக்கும்.

எது எப்படியிருந்தாலும் சிறு உற்பத்தியாளர்களின் தரத்தினுடன் சிறிய விவசாய உற்பத்தியை உள்ளூர், தேசியளவில் மற்றும் உலகளவிலுள்ள சந்தைக்கு எடுத்துச் செல்லல் வேண்டும். இந்த விடயத்தில் தாவரங்களிலும் வளர்ப்பு விலங்குகளிலும் ஏற்படும் பீடைகளும் நோய்களும் இன்னும் அதிகரிக்க வாய்ப்புக்களும் உண்டு.

இவற்றை விட முரண்பாடுகள், தர்க்க நிலைமைகள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் விவசாயஞ்சார் வாழ்வாதாரத்தை முடக்கிவிடும் நிலைமைகளை தோற்றுவிக்கும் என்பதால் பசி பட்டினியினை முடிவுறுத்தும் முயற்சிகள் மீண்டும் பிற்போடப்பட்டும் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இவற்றுடன் எரிபொருள் விநியோகம் என்பன மேலும் இடர்களைச் சந்திக்கும்.

2023ஆம் ஆண்டுக்கான உணவு விவசாய ஸ்தாபனத்தின் தகவலின் படி 2022ஆம் ஆண்டில் 735 மில்லியன் மக்கள் பசிபட்டினியினுள் சிக்குண்டார்கள். இந்நிலையில் உணவு விரயமாதல் மற்றும் கழிவாதல் உணவு வழங்கல் தொகுதியின் செயற்பாட்டை நலிவடையச் செய்துவிடும். இதில் உணவு விரயமாதல் மற்றும் வீணாதல் உணவுற்பத்தியிலிருந்து உணவு உட்கொள்ளும் வரையான உணவு வழங்கல் சங்கிலியமைப்பில் அதிக தாக்கத்தைச் செலுத்தும்.

இதற்கும் மேலாக அறுவடைக்குப் பிந்திய நிலையிலிருந்து (Post harvest) சந்தைப்படுத்தலின் ஆகக்குறைந்த சங்கிலியமைப்பின் சில்லறை விற்பனை (Retail) நிலை வரை 14 சதவீதம் உற்பத்தியான உணவு விரயமாகிவிடும். ஐரோப்பாவில் கணிப்பிடப்பட்டதன்படி ஒருவர் வருடமொன்றுக்கு 131 கிலோகிராம் உணவை விரயமாக்குவதாகவும் இதன்படி வருடத்திற்கு 58 மில்லியன் தொன் உணவு விரயமாக்கப்படுகின்றது. இதனை கணக்கிட்டு 132 பில்லியன் யூரோக்கள் (இலங்கை நாணயத்தின் படி 46,000, 000,000,000/=) என அறிவித்திருக்கின்றார்கள். அதே நேரம் 37 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உணவின்றி தவிக்கின்றனர் என்றால் பாருங்களேன்.

ஏறக்குறைய 10 சதவீதமான அனைத்து உணவும்ஒவ்வொரு மட்டத்திலும் வீணாக்கப்படுகின்றது. இவ்வாறு வீணாக்கப்படும் உணவு வினைத்திறனாக விரயமாகாது பயன்படுத்தப்பட்டால் உணவின்றி தவிக்கின்ற பல மக்களுக்கு உணவளிக்க முடியும். இந்த உணவு வழங்கலில் கிடைத்தலில் சமநிலை எய்தலை வினைத்திறனாக செய்யும் பொறிமுறை எதுவும் இதுவரையில் வெற்றி பெறவில்லை.

உணவு வழங்கல், நுகர்வோர் மட்டத்தில் இன்னும் சில்லறை வியாபாரத்தில் 17 சதவீதமான உலகளாவிய உணவுற்பத்தி விரயமாக்கப்படும். இவற்றுடன் உலகெங்குமிருந்து கிடைத்திருக்கின்ற தகவல்கள் முழுமைபெறாததால் மொத்த உணவு விரயம் அறுவடைக்கு முந்திய நிலையிலிருந்து உணவு வழங்கல் சங்கிலியின் இறுதிவரை எதிர்பார்க்கப்பட்டதை விட மேலும் அதிகமானதாகவே இருக்கும்.

தற்போதுள்ள விவசாய உணவுத்தொகுதிகள் சீரற்ற நிலையில் தளம்பலுடன் காணப்படுவதனால் இந்நிலைமை இனிவருங்காலங்களில் இன்னும் மோசமான நிலைமையையே எட்ட எத்தனிக்கும். குறிப்பாக விவசாய நிலங்களின் உற்பத்தித்திறன் நலிவடைவதாலும் பச்சை வீட்டு வாயுக்களின் அதிகரிப்பும் உயிர்ப்பல்வகையின் இழப்பும் அதிகளவிலான நிலத்தடிநீர் பயன்பாடும் இவற்றுக்கான முக்கிய காரணங்களாக எடுத்தியம்பப்பட்டிருக்கின்றன.

சூழலிலேற்படுகின்ற மாற்றங்கள் உணவுத்தொகுதியில் மாற்றங்களை ஏற்படுத்தி காலநிலை மாற்றத்தின் அதீத தாக்கத்துக்குள் மேலும் சிக்குண்டு போக வைத்துவிடும். எதிர்பாராத காலநிலை மாற்றத்தின் வெளிப்பாடு இவற்றினை மேலும் விபரீதமாக்கிவிடும்.

இந்நிலையில் உணவு வீணாதல் மற்றும் விரயமாதலை குறைப்பதற்கான முயற்சிகள் விரைந்தெடுக்கப்பட்டாலன்றி உணவுக்கான தேவையை சீர்செய்ய முடியாது. இது 2030 ஆம் ஆண்டளவில் எதிர்பார்க்கப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்கினை சாத்தியமற்றதாக்கிவிடும். விவசாய உணவு தொகுதிகளின் வினைத்திறனான மாற்றம் உணவு கிடைத்தலிலிருந்து உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துவதோடு ஆரோக்கியமான உணவு கிடைத்தலை உறுதி செய்வதுடன் அதனை தக்கவைக்கவும் உந்துதலளிக்கும். எனவே தான் எமது சூழலை பாதுகாக்கின்ற அனைத்து முயற்சிகளையும் நாம் விரைந்து எடுத்திட வேண்டும். இது மக்களின் பங்களிப்புடன் செயற்படுத்தும் திட்டங்களூடாக செய்ய முடியும். வீட்டிலிருந்து ஆரம்பித்து உணவை வீணாக்குவதை தவிர்க்க பழகிக்கொண்டால் உலகத்திற்கான உணவினை உற்பத்தியானதிலிருந்தே வழங்கிட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதித்துறை மீதான அச்சுறுத்தல்கள் நீதிப்பொறிமுறை வலுவிழக்கச் செய்துள்ளது

## யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாருக்கும் அடிபணியாமல் நீதி வழுவாது தீர்ப்புக்களை வழங்கிய முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா அரசியல் அழுத்தங்களாலும் உயிர் அச்சுறுத்தல் காரணமாகவும் மன அழுத்தத்திற்கு உள்ளாகி விரக்தியினால் பதவி விலகி நாட்டைவிட்டு வெளியேறி உள்ளமை நாட்டின் நீதிப் பொறிமுறையின் சுயாதீனத் தன்மை அற்ற நிலையை மீண்டும் ஒரு தடவை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது என யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

நாட்டின் இன்றைய நிலைக்கும் இனப்பிரச்சினைக்கும் சுயாதீனமற்ற நீதித்துறையும் ஒரு காரணமாகும். நீதிபதி சரவணராஜா மட்டுமல்ல இலங்கை அரச இயந்திரத்தின் சகல துறைகளும் அரசினதும் பேரினவாத சக்திகளினதும் அரசியல் அழுத்தங்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாகின்றமை என்பது ஒரு புதிய விடயமல்ல. இதனால் தான் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல், இறுதியுத்தம் உள்ளிட்ட பல சம்பவங்களிற்கு உள்ளக விசாரணையை மறுத்து சர்வதேச விசாரணையை பாதிக்கப்பட்ட தரப்புக்கள் கோருகின்றன.

எனவே இலங்கை மற்றும் சர்வதேச முற்போக்கு சக்திகள் இணைந்து இந்நிலையைச் சீர் செய்ய நீதித்துறை உள்ளிட்ட அரச இயந்திரம் அனைத்தும் சுயாதீனமாக இயங்க காத்திரமான செயற்பாட்டினை முன்னெடுக்க வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (5-6)

# கே.கே.எஸ் பகுதியில் விடுவிக்கப்பட்ட காணிகளுக்கு

## வேலி அமைக்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.காங்கேசன்துறை மாங்கொல்லை பகுதியில், இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள காணிகளை உரிமையாளர்கள் வேலி அடைத்து அறிக்கைப்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 33 வருட காலமாக உயர்பாதுகாப்பு வலயமாக காணப்பட்ட மாங்கொல்லை பகுதியில் இருந்து கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தினர் வெளியேறி உள்ளனர். ஆனாலும் குறித்த பகுதி இராணுவத்தினரால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவில்லை. அதனால் அக் காணி உரிமையாளர்கள் அப் பகுதியில் குடியமர முடியாத நிலை காணப்படுகிறது.

இந்நிலையில் காணி உரிமையாளர்கள் தெல்லிப்பழை பிரதேச செயலரிடம் தமது காணிகளுக்குள் ஊடுருவும் திருடர்களை கட்டுப்படுத்தும் முகமாக தமது காணிகளை சுற்றி வேலி அடைத்து அக் காணிகளை அறிக்கைப்படுத்த அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். அதனை அடுத்து அப்பகுதியில் தமது காணிகளை சுற்றி வேலி அடைக்க பிரதேச செயலர் அனுமதி அளித்துள்ளார்.

அதேவேளை 33 வருட காலமாக இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்குள் இருந்த மாங்கொல்லை வைரவர் ஆலய திருத்த பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் ஆலயத்திற்கு மின்சார இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (5-6-33)




வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பண்பாட்டுப் பேரவையும் பூநகரி பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய பிரதேச பண்பாட்டுப் பெருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (படம்: தேவானந்தம்)




### அனோஜா

இந்த வருசத்துல 9 மாதம் முடிஞ்சிருச்சு




இதுவரைக்கும் உருப்படியா நீயும் ஒன்னும் பண்ணல என்னையும் பண்ண விடல.

### மிதுனா

மனைவி- அம்மா வீட்டுக்கு போய் ஒரு வருஷம் ஆச்சு, இன்னிக்கு போய்ட்டு வர்றேன்.
கணவன்- உங்க அம்மா முந்தநாள்தானே இங்கிருந்து போனாங்க?



மனைவி- நான் அவங்க வீட்டுக்கு போய் ஒரு வருஷம் ஆகுதுல்ல...

### கோபினா

உங்க டூத்பேஸ்ட்ல உப்பு இருக்கா... இத்தனை வருஷம் ஆகியும் இன்னும் குழம்புல இருக்கிற உப்பையே என்னால கண்டு பிடிக்க முடியல...



### தர்சிகன்

என்னடி இப்போ எல்லாம் நம்ம மேனேஜர் உன்ன பாத்த சிரிக்கிறது இல்ல ஏன்...



நீங்க சிரிக்கும் போது உங்க வாய் எங்க தாத்த வாய் மாதிரி இருக்குதுனு சொன்னேன்...

### ஆதவன்

சண்டே ஆனா பதினொரு மணிக்கு எந்திரிக்க வேண்டியது...



அப்புறம் சீக்கிரம் முடிஞ்சுட்டுதேனு அழ வேண்டியது...

### நிதர்சன்

இந்தக் கல்யாணத்தில புதுமையான டிஜிற்றல் பந்தியாமே?



மொய் எழுதினதும் உங்க மொபைல் நம்பருக்க otp அனுப்புவாங்க. அந்த நம்பரை சொன்னாதான் சாப்பாடாம்!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர்

299



வந்தியத்தேவன் பூங்குழலியின் படகில் சென்று இலங்கைத் தீவில் இறங்கிய அதேநாள் மாலையில் ஆழ்வார்க்கடியான் நம்பி இராமேசுவரம் வந்து சேர்ந்து விட்டான்.

அந்தப் புண்ணிய பூமியை மிதித்த உடனே ஆழ்வார்க்கடியானுடைய மனத்தில் அத்தனை நாளும் அடங்கிக் கிடந்த வைஷ்ணவ ஆர்வம் கரையை உடைத்துக் கொண்டு பொங்கி விட்டது. இராமேசுவரத் தீவில் எங்கெங்கும் மொய்த்துக் கொண்டிருந்த வீர சைவ பட்டர்கள் அந்த ஆர்வத்துக்குத் தூபம் போட்டு விட்டார்கள். அந்தப் புண்ணிய ஸ்தலத்துக்கு வரும் யாத்ரீகர்களுக்கு வழிகாட்டி அழைத்துச் சென்று பற்பல தீர்த்தங்களிலும் ஸ்நானம் பண்ணி வைப்பதும் ஆலயத்தில் மூர்த்தி தரிசனம் செய்து வைப்பதும் அந்தந்தத் தீர்த்தம் மூர்த்தி விசேஷங்களை எடுத்துச் சொல்வதுமே அவர்களுடைய அலுவல்கள். எனவே, புதிய யாத்ரீகர்களைக் கண்டதும் பட்டர்கள் பலர் சென்று சூழ்ந்து கொள்வார்கள். அவ்விதமே ஆழ்வார்க்கடியானையும் சுற்றி மொய்த்துக் கொண்டார்கள்.

"அப்பனே! வா! வா! இந்த ஸ்தலத்திலுள்ள அறுபத்து நான்கு தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து உன் தேகத்தில் தரித்திருக்கும் வைஷ்ணவப் பாஷாண்டமத சின்னங்களைக் கழுவித் துடைத்துக் கொள். இராமரின் பிரம்மஹத்தி தோஷத்தைப் போக்கிய ஸ்தலம் அல்லவா இது? வைஷ்ணவ பாஷாண்ட மத சின்னங்களை நீ அணிந்ததினால் ஏற்பட்ட பாவங்களையும் போக்கிக் கொள்ளலாம்" என்று ஒரு பட்டர் விந்நியாசமாகப் பேசினார்.

இன்னொருவர் குறுக்கிட்டு, "இராம தீர்த்தம், லக்ஷ்மண தீர்த்தம், ஆஞ்சநேய தீர்த்தம், சுக்ரீவதீர்த்தம் இப்படி அறுபத்து நாலு தீர்த்தங்கள் இருக்கின்றன. ஒவ்வொருவரும் அந்தந்த தீர்த்தத்தில் தலை மூழ்கி அவரவர்களுடைய தோஷத்தைப் போக்கிக் கொண்டார்கள். நீ என்னுடன் முதலில் ஆஞ்சநேய தீர்த்தத்துக்கு வா. வைஷ்ணவ சின்ன தோஷத்துக்குச் சரியான சங்கல்பம் பண்ணி வைக்கிறேன்" என்றார்.

மற்றொரு பட்டர் "அப்பனே! இவர்கள் சொல்வதைக் கேளாதே! இராமர் இராவணனைக் கொன்ற பிரம்மஹத்தி தோஷத்தைப் போக்கிக் கொள்வதற்காகச் சமுத்திர மணலைப் பிடித்து வைத்துச் சிவலிங்கமாக்கிப் பூஜித்த இடத்துக்கு உன்னை நேராக அழைத்துப் போகிறேன்" என்றார்.

ஆழ்வார்க்கடியான் கண்ணில் தீப்பொறி பறக்க எல்லாரையும் ஒரு தடவை விழித்துப் பார்த்து, "நிறுத்துங்கள் உங்கள் அபத்தப் பேச்சை. முதலில் நீங்கள் சொன்ன தீர்த்தங்களினால் உங்களுடைய நாவை அலம்பி உங்கள் பாவத்தைத் தீர்த்துக் கொள்ளுங்கள்" என்றான்.

"ஓஹோ! இராமன், லக்ஷ்மணன் என்றெல்லாம் சொன்னதனால் எங்களுக்குப் பாவம் வந்திருக்கும் என்று நினைக்கிறாயா? அப்படி ஒன்றுமில்லை. இந்த க்ஷேத்திரத்துக்குப் பெயரே இராமேச்சுவரம் இராமர் ஈசுவரனாகிய சிவபெருமானைப் பூஜை செய்து பாவத்தைப் போக்கிக் கொண்ட இடம். அத்துடன் இராமர் என்ற பெயரில் இருந்த தோஷமும் போய்விட்டது" என்றார் ஒரு வீர சைவ பட்டர்.

"ஒ அஞ்ஞான சிரோன்மணிகளே! ஏன் இப்படித் தலைக்குத் தலை உளறுகிறீர்கள்? இந்த ஸ்தலப் பெயரின் அர்த்தம் இன்னதென்பதையே நீங்கள் தெரிந்து கொண்ட பாடில்லை"

"நீதான் சொல்லேன்பார்ப்போம்"

"பிரம்மாவினுடைய ஒரு தலையைப் பறித்ததினால் சிவனுக்குப் பிரம்மஹத்தி தோஷம் பிடித்துவிட்டது. திருமாலின் பூரண அவதாரமாகிய இராமபிரானுடைய பாதம் பட்டுப் புனிதமான இந்த இடத்துக்குச் சிவன் வந்து அந்தப் பிரம்மஹத்தி தோஷத்தைப் போக்கிக் கொண்டார். இராமரை ஈசுவரன் பூஜித்த இடமானபடியால் இராமேசுவரம் என்ற பெயர் ஏற்பட்டது. தெரிந்து கொண்டீர்களா? மூடசிகாமணி பட்டர்களே!" என்று ஆழ்வார்க்கடியான் கர்ஜித்தான்.

"யாரடா! அவன் எங்களை மூட சிகாமணிகள் என்பது? அடே தடியா! நீ என்ன தலையில் கொம்பு முளைத்தவனா?" என்று ஒரு பட்டர் சீறினார்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மாயமாகிய ஊதா ஜாடி

(நேற்றைய தொடர்ச்சி...)



அவர்கள் நடந்த வாறே ஒரு மெடிக்கல் கடைக்குள் நுழைந்தனர். அம்மா சில வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்கினார். அங்கு அழகான ஊதா கலர் ஜாடியை பார்த்தாள் ரோஸ்மாண்ட்.

அம்மா அம்மா அது மிகவும் அழகாக இருக்கிறது அதை வாங்கி தாருங்கள் என அடம் பிடித்தாள். அம்மாவோ, அதை வைத்து நீ என்ன செய்வாய் என கேட்டார்.

அது உனக்கு உதவாது மகளே என்று வெளியே நடக்க ஆரம்பித்தார். நாம் வீட்டிற்கு தேவையான காய்கறிகள் வாங்க வேண்டும். ஆகையால் அந்த கடைக்கு செல்லலாம் என் அன்பு மகளே என்றார் அம்மா.

ரோஸ்மாண்ட், அம்மா எனக்கு அந்த ஜாடி மிகவும் பிடித்திருந்தது. ஏன் அதை வாங்கி தர மாட்டேன் என்கிறீர்கள். நீங்கள் பணம் ஏதும் எடுத்து வரவில்லையா? நான் ஆசையா கேட்கிறேன் எதுவும் வாங்கி தர மாட்டேன் என்கிறீர்கள் என்று வேதனையில் பொங்கினாள்.

நான் பணம் எடுத்து வந்தேன். ஆனால் நீ உனக்குத் தேவையான பொருளாய் வாங்கிக்கோ. பயன்படாத பொருட்களை வாங்குவதால் பணவிரயம் தான் ஆகும் என்றார் அம்மா.

ஆனால் அம்மா அந்த ஜாடியில் நான் பூக்களை வைத்து கொள்வேன். அலங்கரிப்பேன் என்றாள். அம்மாவும் சரி யோசிப்போம் என்று காய்கறி வாங்க நடந்தார். சட்டென ரோஸ்மாண்ட் காலில் ஏதோ குத்தியது போல் உணர்ந்தாள்.

அவளின் காலணி அடியில் பெரிய ஓட்டை இருப்பதை பார்த்தாள். அம்மாவிடம் காட்டினாள். அம்மாவோ சரி உனக்கு முதலில் காலணிகள் வாங்கலாம் என்றார். இருவரும் செருப்பு கடைக்கு சென்றார்கள். கடைக்காரர், வாங்கம்மா என்ன வேண்டும் யாருக்கு ஷூ பார்க்கிறீர்கள் என்றார்.

ரோஸ்மாண்ட் அம்மா, என் மகளுக்குத்தான் என்றார். அவர் அவளுக்கு தகுந்த அளவில் ஷூ எடுத்து கொடுத்தார். ஆனால் அவளுக்கு அந்த ஜாடியின் மேல் தான் ஆசை இருந்தது. அந்த கடைக்குள் சென்றதும் நாற்றம் வீசியது.

அம்மா அம்மா இந்த கடைக்குள் நிக்கவே முடியவில்லை. கெட்ட வாசனை வருகிறது என்றாள் ரோஸ்மாண்ட். அது தோலினால் செய்த காலணிகள் உனக்கு இவை பொருத்தமாக இருக்கும் என்றார் அம்மா.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமைகளுக்கு இடையே உண்மை வெற்றி பெறும்!

– ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மற்றவர்களிடம் இருந்து கற்றுக் கொள்ளுங்கள்

காட்டில் சிங்கம், கரடி, நரி மூன்றும் ஓரிடத்தில் நின்றிருந்தன. அங்கு மான் ஒன்றை சிங்கம் அடித்துப் போட்டிருந்தது.

இப்போது மானை உண்பதன் பொருட்டு அதனை மூன்றாகப் பங்கிடுமாறு கரடிக்கு சிங்கம் கட்டளையிட்டது.

கரடியோ மானை மூன்று சமபங்காகப் பிரித்துவிட்டு ராஜாவே! இதோ மானை மூன்று சமபங்காகப் பிரித்துவிட்டேன் என்றது.

இதனைக் கேட்ட சிங்கம்; இல்லை எனக்கென்றால் பிரிப்பு சரியாக இல்லை போல் தெரிகிறது. ஒருக்கால் சரி செய் என்றது.

இல்லை ராஜா! மானை மூன்று சமபங்குகளாகப் பிரித்துள்ளேன். அதில் எந்தத் தவறும் இல்லை என்று பதிலளித்தது கரடி.

கடும் கோபமுற்ற சிங்கம் ஓங்கி ஓர் அறை விட்டது. அவ்வளவுதான் கரடி பொத்தென்று கீழே விழுந்தது.

இப்போது நரியைப் பார்த்த சிங்கம் நரியாரே நீர் மானை இரண்டாகப் பங்கிடுக என்றது.

உடனே நரி மானின் வாலை மட்டும் புறம்பாக எடுத்து வைத்துவிட்டு, மிகுதி முழுவதையும் ஒன்றாக்கி ராஜா இது உங்களுக்கு. அதோ! வால் எனக்கு என்றது.

இதைப் பார்த்த சிங்கம் அட! நீ சரியாகப் பங்கிட்டிருக்கிறாய். இதை யாரிடம் கற்றுக் கொண்டாய் என்று வினவியது.

அதற்கு நரி, அங்கு விழுந்து கிடக்கும் கரடியைக் காட்டி அதோ! அந்தக் கரடியிடம் இருந்துதான் கற்றுக் கொண்டேன் என்றது.

ஆக, மற்றவர்களிடம் இருந்து கற்பதென்பது மிகவும் முக்கியமானது.

எனினும் இது விடயத்தில் நம் தமிழ் அரசியல்வாதிகள் மிகவும் பலயீனமாக இருக்கிறார்கள் என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

ஆம், பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் அண்ணாமலையின் அரசியல் வியூகத்தை அவதானித்துப் பாருங்கள்.

அவர் தொடங்கியுள்ள என் மண் என் மக்கள் என்ற யாத்திரையில் ஒவ்வொரு நாளும் 25 ஆயிரம் மக்களைச் சந்திக்கிறார்.

அவ்வாறு சந்திப்பவர்களில் பெரும்பாலானவர்கள் அடிமட்ட மக்கள்.

தவிர, அதற்காக ஓய்வு உறக்கமின்றி மிக நீண்ட நேரத்தைச் செலவிடுகின்றார்.

மக்கள் முன்பாக அவர் ஆற்றுகின்ற உரை, அந்த உரையில் கடைப்பிடிக்கப்படும் நயத்தக்க நாகரிகம். முன்வைக்கின்ற தகவல்கள் என்பன நினைத்துப் பார்க்க முடியாதவை.

அவரின் கடினமான அரசியல் பணி, பாரதிய ஜனதாக் கட்சிக்கான ஆதரவை தமிழகத்தில் எழுச்சி பெறச் செய்துள்ளது.

இதனைப் பார்க்கும்போது ஏன்தான் எங்கள் தமிழ் அரசியல்வாதிகள் இவ்வாறு செய்வதில்லை. அவர்களைப் பார்த்தேனும் இவர்கள் கற்றுக் கொள்ளலாமே என்று நாம் நினைப்பதுண்டு.

இருந்தும் நம் நினைப்பு நினைப்பாகவே நீள்கிறது.

இனியேனும் இது பற்றி நம் தமிழ் அரசியல்வாதிகள் சிந்திக்க வேண்டும்.

# யாழில் எதிர்வரும் 6,7,8 ஆம் திகதிகளில் உள்ளூர் உற்பத்தி வர்த்தக கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் உற்பத்தி பொருட்களுக்கான சந்தை வாய்ப்பை மேம்படுத்தும் நோக்கில் இலங்கை. கைத்தொழில் அமைச்சின் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட செயலகத்தோடு இணைந்த Mate in the srilanka வர்த்தகக் கண்காட்சியினை நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவானர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

Mate in the srilanka வர்த்தகக்கண்காட்சி தொடர்பாக ஊடகவியாளர்களுக்கு தெளிவுபடுத்தும் ஊடகசந்திப்பு நேற்று யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த கண்காட்சியை இம் மாதம் 06,07,08 ஆகிய திகதிகளில் நடாத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண கலாசார நிலையத்தின் வளாகத்தில் இந்த கண்காட்சி நடைபெற இருக்கிறது.

இந்த வர்த்தக கண்காட்சியில் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து சுமார் 60 தொடக்கம் 80 வகையான உற்பத்தியாளர்கள் பங்கு பற்றும் வகையில் இந்த கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது

இந்த கண்காட்சிக்கான அனுமதி இலவசம். வட மாகாணத்தில் இருக்கக்கூடிய உள்ளூர் உற்பத்தியாளர்கள் இதில் பங்குபெற்ற முடியும். தாங்கள் பங்கு பற்ற விரும்பினால் தேசியத் தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையினுடைய மாவட்ட உத்தியோகத்தரை தொடர்பு கொண்டு பதிவு செய்யலாம். தொலைபேசி இலக்கம் 77 43 46 516 இந்த இலக்கத்தில் தொடர்பு கொண்டு உற்பத்தியாளர்கள் இதில் பங்குபற்ற முடியும்.

இதில் கடல் சார்ந்த உணவு உற்பத்திகள், தேனி உணவு உற்பத்திகள், பனை மற்றும் தும்புசார் உற்பத்திகள் ஆடை உற்பத்திகள், கைப்பணி உற்பத்திகள், தோல் உற்பத்திகள், காலணி கைப்பை போன்ற உற்பத்திகள் மற்றும் ஏனைய உள்ளூர் உற்பத்திகள் கண்காட்சி விற்பனைக்குமாக காட்சிப்படுத்தப்படும் என்றார்.

இலங்கை கைத்தொழில் அமைச்சின் மேலதிக செயலாளர் லக்கதாஸ், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை பணிப்பாளர் தனுக்கலியனகம ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

(ம-7,33,104)

# ஊழல் எதிர்ப்பு சட்டத்தில் பாரிய குறைபாடுள்ளது

## சபையில் எதிர்க்கட்சித் தலைவர்

சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட ஊழல் எதிர்ப்பு சட்டத்தில் உள்ள குறைபாடு காரணமாக, அந்தச் சட்டத்தை முறையாக அமுல்படுத்த முடியவில்லை என்றும், இது சட்டத்தில் உள்ள அடிப்படைக் குறைபாடு என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் பிரிவு 3 (1) இல் குறிப்பிடப்படும் ஆணைக்குழுவும், மற்றும் பிரிவு 4 (1) இல் குறிப்பிடப்படும் அதன் உறுப்பினர் தெரிவும் அரசியலமைப்பு பேரவையின் ஒப்புதலுடன் ஜனாதிபதியால் நியமனங்கள் செய்யப்பட்டாலும், இந்த சட்டமூலத்தை தயாரிப்பதில் ஏற்பட்ட பிழை காரணமாக அரசியலமைப்பு பேரவை அந்த அதிகாரத்தை இழந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அரசியலமைப்புச் சட்டத்தில் "அரசியலமைப்புப் பேரவை" என்று கூறப்பட்டிருந்தாலும், இந்தச் சட்டத்தில் "அரசியலமைப்பு சபை" என 11 இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், ஆங்கிலப் பதிப்புக்கும் சிங்களப் பதிப்புக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டால், சிங்களப் பதிப்பே செல்லுபடியாகும் என்பதால், அந்தச் சொல் சரியாக குறிப்பிடப்படாத காரணத்தால் அரசியலமைப்பு பேரவையால் அந்த ஆணைக்குழுவுக்கு உரிய உறுப்பினர்களை நியமிக்க முடியாமல்போயுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

பாரிய அளவில் ஊழல் நடந்திருப்பதாக சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்ட நேரத்தில் குறித்த தவறை உடனடியாக திருத்த வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ம-7)

# குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு சீன அரசாங்கத்தினால் வீட்டுத்திட்டம்

மேல் மாகாணத்தில் குறைந்த வருமானங் கொண்டவர்களுக்கு சீன அரசாங்கத்தினால் வீட்டுத் திட்டமொன்றை கொண்டுவர அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் மேல் மாகாணத்தில் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் வசிக்கின்றவர்களை புனர்வாழ்வளித்து வசதிகளுடன் கூடிய நகர்ப்புற உத்தேச வீட்டுத்திட்ட முறையில் வீடுகளில் குடியமர்த்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்திற்கமைய நடைமுறைப் படுத்தப்படும் மறுமலர்ச்சிக் கருத்திட்டத்திற்கான உதவித்தொகையாக 1,996 வீட்டு அலகுகளை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக 552 மில்லியன் யுவான் நிதியுதவியை வழங்குவதற்கு சீனக் குடியரசு உடன்பாடு தெரிவித்துள்ளது.

ஒட்டுமொத்தக் கருத்திட்டத்தின் கீழ் காணி அபிவிருத்தி செய்தல் மற்றும் வேலைத்தளத்திற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் இலங்கை அரசாங்கம் வழங்கவுள்ளது.

அதற்கமைய, சீனக் குடியரசுடன் குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என தெரிவித்துள்ளார். (ம-7)

# மட்டு. விபத்து; ஒருவர் உயிரிழப்பு

மட்டு. ஏறாவூர் பிரதேசத்தில் ரயிலுடன் முச்சக்கரவண்டியொன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஏறாவூர் ஜின்னா வீதி புகையிரதக் கடவையைக் கடக்க முற்பட்ட முச்சக்கரவண்டியே இவ்வாறு மட்டக்களப்பில் இருந்து பொலன்னறுவை நோக்கி சென்ற ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் உயிரிழந்தவர் ஏறாவூரைச் சேர்ந்த 39 வயதுடைய அப்துல் ரஹ்மான் ரமீஸ்எனத்தெரியவந்துள்ளது.

சடலத்தை பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# நூலக கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி பொது நூலகத்தின் நூலக கண்காட்சியும் நடமாடும் நூலக சேவை நிகழ்வும் இன்று புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை இடம்பெறவுள்ளது.

இதன்போது "வாசகரை நோக்கி நூலக சேவை" எனும் கருத்திட்டத்தின் கீழ் பிரதேசசபையின் நாவற்குழி உபப்ணிமனை எல்லைக்குட்பட்ட பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகளில் நூல் கண்காட்சி நிகழ்வினை முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-7,30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II



02

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

தமிழ் மக்கள் வாழ்ந்த வன்னிப் பிரதேசங்களுடன் ஓரளவாயினும் தொடர்புடைய இவன் நான்கு ஆண்டுகள் மட்டுமே ஆட்சி புரிந்தான். இவன் தான் இறக்கு முன் சிறு குழந்தைகளாய் இருந்த தன் மக்கள் பராக்கிரமபாகு, புவனேகபாகு ஆகிய இருவரையும் குருமார் பாதுகாப்பில் விட்டான்.

இவன் கொத்மலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தந்ததாது மற்றும் பாத்திரதாதுவை பெலிகலவிற்கு எடுத்து வந்து அங்கு தலதாமாளிகையொன்று அமைத்து அதில் பாதுகாத்ததாக கூறப்படுகிறது. 3ம் விஜயபாகு காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்கள் பற்றி அறியக் கிடைக்கவில்லை.

### இரண்டாம் பராக்கிரமபாகு (கி.பி.1234-1269)

இரண்டாம் (பண்டித) பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலம் அக்காலத்து பூஜாவலியில் கி.பி 1234 இல் இருந்தும் அவனின் தந்தையார் மூன்றாம் விஜயபாகு இறந்து ஏறக்குறைய் பத்து ஆண்டுகள் பிற்பட்ட காலத்திலிருந்து கணிக்கப்படுகின்றது. இவன் தம்பதெனிய இராச்சியத்தின் அரசனாக கி.பி 1234 முதல் 1269 வரை அரசாண்டவன். இவனது முடிசூட்டல் 1236ல் நடந்தது. இவன் தனது தந்தை மூன்றாம் விஜயபாகுவை அடுத்து தம்பதெனியாவை அரசாண்டான். இவனுக்குப் பின்னர் இவனது மகன் நான்காம் விஜயபாகு அரசாண்டான். இவனது ஆட்சிக் காலத்தில் இருந்த செப்பு மோசா நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்நாணயத்தின் முன் பக்கத்தில் எழுந்து நிற்கும் அரசனும் பின்பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் அரசனும் நாகரி எழுத்தில் பெயர் சிறீ பராக்கிரமபாகு என்றும் எழுதப்பட்டிருப்பதைக் காணலாம். இந்நாணயத்தின் விட்டம் 19.44 மி.மீ ஆகக் காணப்படுகிறது.

### இரண்டாம் பராக்கிரமபாகு ஆட்சிக்கால செப்பு மோசா நாணயம்

தந்தை மூன்றாம் விஜயபாகு கலிங்கமாகனை விரட்ட எடுத்த முயற்சியில் இவன் வெற்றி கண்டான்.

1255 இல் பாண்டிய படையினரின் உதவியைப் பெற்று நாற்பது ஆண்டுகளாக இந்நாட்டை ஆண்டு கொண்டிருந்த கலிங்கமாகனைத் தோற்கடித்தான். பின் ஜாவா நாட்டைச் சேர்ந்த சந்திரபானு இரண்டு முறை படையெடுத்த போது அந்த இரண்டு படை நடவடிக்கைகளையும் தோல்வியடையச் செய்தான்.

இரண்டாம் பராக்கிரமபாகு இலக்கிய வளர்ச்சிக்கு பணி ஆற்றினான். இவனின் கல்வி பாண்டித்தியம் காரணமாக கலிகால சாகித்திய சர்வ ஞான பண்டிதன் என அழைக்கப்பட்டான். தம்பதெனியா கதிகாவத எனும் பெயரில் பௌத்த சமய ஒழுக்க கோவையை பொறித்தான். இவனது ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயத்தின் படம் தரப்பட்டுள்ளது.

இவன் முப்பத்து மூன்று ஆண்டுகள் அரசாண்ட பின் கி.பி. 1267/68 வரையில் தன் மூத்த மகனான போதி சத்துவ விஜயபாகு எனப்பட்ட நான்காம் விஜயபாகு என்பான் பொருட்டு அரசு துறந்தான். ஆனால் நான்காம் விஜயபாகு மூன்று ஆண்டுகளே ஆட்சி செய்தான்.

### நான்காம்விஜயபாகு (கி.பி. 1269-1272)

போசத் விஜயபாகு (கி.பி. 1269-1272) என அழைக்கப் பெற்ற நான்காம் விஜயபாகு தம்பதெனியாவிலிருந்து ஆண்ட மன்னன். இவன் அநுராதபுரத்திற்குச் சென்றபோது, வன்னியர் இவனுக்குப் பணிந்து திறை செலுத்தியதாக, "சூளவம்சம்" கூறுகின்றது. இவன் மூன்று ஆண்டுகள் ஆண்டான் என்பது குறிப்பிடத்தக்கது. இவனது ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயத்தின் படம் தரப்பட்டுள்ளது.

மித்த என்ற படைத் தலைவன், வேலையாள் ஒருவனுக்கு இலஞ்சம் கொடுத்து கி.பி 1272 இல் போசத் விஜயபாகு அரசனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினான். அரசுரிமை இல்லாத ஒருவன் அரசனானதால் கலகம் ஏற்பட்டது. எனவே மித்த என்ற படைத் தலைவனைக் நீக்கி விட்டு அரசுரிமையை நான்காம் விஜயபாகு மன்னனின் சகோதரன் புவனேகபாகு திரும்பவும் ஆட்சிப் பொறுப்பை பெற முயற்சி செய்து வெற்றி பெற்றான்.

நான்காம் விஜயபாகு ஆட்சிக் காலத்தில் இருந்த செப்பு மோசா நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்நாணயத்தின் முன்பக்கத்தில் எழுந்து நிற்கும் அரசனும் பின்பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் அரசனும் நாகரி எழுத்தில் சிறீ விஜயபாகு என்றும் எழுதப்பட்டிருப்பதைக் காணலாம். இந்நாணயத்தின் விட்டம் 19.44 மி.மீ ஆகக் காணப்படுகிறது. பொலநறுவை மற்றும் தம்பதெனிய காலத்தின் மிகவும் பொதுவான ஆறு செப்புமாசா நாணயங்களில் இதுவும் ஒன்றாகும். இந்த நாணயம் விஜயபாகு II (1186-1187) அல்லது வி[illegible] நாணயங்[illegible] எனக் கருதப்படுகிறது.

### நான்காம்விஜயபாகு ஆட்சிக்கால செப்பு மோசா நாணயம் 1ஆம்புவனேகபாகு (கி.பி.1272- 1284)

1 ஆம்புவனேகபாகு கி.பி. 1272 இல் தம்பதெனியாவில் ஆட்சியேற்று தனது சிறிதுகால ஆட்சியின் பின் ஆட்சி மையத்தளமாக யாப்பகூவவை தெரிவு செய்து இராசதானியாக்கினான். தனது சகோதரன் போசத் விஜயபாகுவிற்குப் பக்கபலமாக இருந்த வன்னிய தலைவனிடம் இருந்தும் வடக்கின் ஆட்சியாளனிடம் இருந்தும் இவ்விராச்சியத்திற்கு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டன. இந்த அச்சுறுத்தல்களை இவன் இலகுவாக முறியடித்தான். புவனேகபாகுவுக்கு நாலா திக்குகளிலுமிருந்து அரசியற் சவால்கள் விடப்பட்டன. இலங்கையின் யாழ்ப்பாண அரசன் சிங்கை ஆரியன் பாண்டியரின் உதவியுடன் தன்னைத் தாக்கக் கூடுமென்ற பயம் புவனேகபாகுவிற்கு இருந்தது. இவை காரணமாக மலைகளாலும் காடுகளாலும் சூழப்பட்ட பாதுகாப்பான இடத்திலிருந்த யாப்பகூவைக்குத் தனது தலைநகரை மாற்றிக் கொண்டான். வருடாந்த உபசம்பதா சடங்கை நடாத்திய இம்மன்னன் கி.பி.1284 இல் இறந்தான்.

இதற்கிடையில் குலசேகரம் என்ற பாண்டிய அரசனுடைய பிரதிநிதியான ஆரியச்சக்கரவர்த்தி பெரிய படைகளுடன் வந்து யாப்பகூவவைக் கைப்பற்றி தந்ததாதுவையும் எடுத்துச் சென்றதாக மகாவம்சத்தின் 2ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி.1284 இல் 1 ஆம்புவனேகபாகு அரசனின் இறப்புடன் பஞ்சம் ஒன்று ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

முதலாம் புவனேகபாகு ஆட்சிக் காலத்தில் இருந்த செப்பு மோசா நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்நாணயத்தின் முன்பக்கத்தில் எழுந்து நிற்கும் அரசனும் பின்பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் அரசனும் நாகரி எழுத்தில் சிறீ புவனேகபாகு என்றும் எழுதப்பட்டிருப்பதைக் காணலாம். இந்நாணயத்தின் விட்டம் 19.00மி.மீ

### முதலாம் புவனேகபாகு ஆட்சிக்கால செப்பு மோசா நாணயங்கள்

### ஸ்ரீசங்கபோதிவம்சம் யாப்பகூவாஇராசதானி

யாப்பகூவா என்பது இலங்கையின் தென்மேற்கு ஈர வலயத்தில் காணப்படும் யாப்பகூவா மலையில் [illegible] இராசதானி. இக்குன்று [illegible] 300 மீற்றர்கள் உயரமானது. யாப்பகூவா கோட்டை இலங்கையின் குருநாகலை மாவட்டத்தின் மகவ என்னும் கிராமத்துக்குச் சுமார் மூன்று கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. ஈழத்தின் கலை வரலாற்றில் இரண்டாவது சீகிரியா என வர்ணிக்கப்படுகிறது. யாப்பகூவா இராசதானி தம்பதெனிய இராசதானிக்குப் பின்னர் இலங்கையில் உருவான ஒரு இராசதானி ஆகும். இது இராசதானியாகும் முன்னர் சுபா தளபதியால் ஓர் அரணாகப் பயன்பட்டது. பின்னர் 1273 இல் முதலாம் புவனேகபாகு மன்னனால் தலைநகரமாக மாற்றப்பட்டது. இவனாலேயே இங்கு மாளிகைகளும் யாப்பகூவா கோட்டை கட்டடங்களும் கட்டப்பட்டன.

### மூன்றாம்பராக்கிரமபாகு (கி.பி. 1287-1293)

கி.பி.1284 இல் முதல் அரசர் புவனேகபாகு இறந்தவுடன் பஞ்சம் ஏற்பட்டது. கி.பி 1285 முதல் 1286 வரை இலங்கையில் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசன் இல்லாததால், அக்காலம் அராஜக காலமாகவே கருதப்பட்டது. அதன்பின் நாலாம் விஜயபாகுவின் மகனான மூன்றாம் பராக்கிரமபாகு 1287 முதல் 1293வரை தம்பதெனியாவின் இடைக்கால மன்னராக இருந்தார். இம்மன்னரின் ஆட்சிக் காலம் கி.பி 1302 முதல் 1310 எனவும் சொல்லப்படுகிறது. இம்மன்னர், குலசேகரம் என்ற பாண்டிய அரசனுடைய பிரதிநிதியான ஆரியச் சக்கரவர்த்தியால் எடுத்துச் செல்லப்பட்ட புனித தந்ததாதுவை அவருடன் பரிந்து பேசி மீண்டும் நாட்டிற்கு எடுத்து வந்து பொலநறுவையில் இருந்த புனித தந்ததாது கோயிலில் பிரதிஷ்டை செய்து தனது தலைநகரை பொலநறுவையாகக் கொண்டு நாட்டை ஆட்சி செய்வதில் வெற்றி பெற்றார். அவர் பொலநறுவையில் இருந்து ஆட்சி செய்தாலும் இந்த ஆட்சி யாப்பகூவ காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. பாண்டியப் பேரரசிடமிருந்து தந்ததாதுவை திரும்பப் பெற்றதற்காக, பாண்டிய அரசவையில் தூதுவராகப் பிரதிநிதித்துவம் செய்து தன்னைத் தாழ்த்திக் கொள்ள வேண்டியிருந்தது என்று கூறப்படுகிறது. மேலும், இவரது ஆட்சி காலம் வரலாற்றில் அறியப்படாதது துரதிர்ஷ்டவசமானது.

அவனது உறவினரான முதலாம் புவனேகபாகுவின் மகனான இரண்டாம் புவனேகபாகு தனது முடிதிருத்தும் நபரை மன்னனிடம் அனுப்பி அரியணையைக் கைப்பற்றினார் என்று கூறப்படுகிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டத்தரணிகளை...

நீதிபதிக்கு அச்சுறுத்தல் விடுத்த பின்னணியில் அதற்காக போராடிய சட்டத்தரணிகளை பொலிஸார் அச்சுறுத்தும் விதமாக செயற்பட்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா அவர்களிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக வடக்கு மாகாணங்களிலுள்ள சட்டத்தரணிகள் இணைந்து மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று முல்லைத்தீவு நீதிமன்றம் முன்பாக நேற்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

நீதிபதிக்கு அச்சுறுத்தல் விடுத்த பின்னணியில் அதற்காக போராடிய சட்டத்தரணிகளின் போராட்டத்திலும் பொலிஸார், புலனாய்வாளர்கள் வெளிப்படையாகவே அவர்களை அச்சுறுத்தும் விதமாக புகைப்படங்கள், வீடியோ எடுத்து அச்சுறுத்தல் விடுத்திருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் வடமாகாண சட்டத்தரணிகள் சங்கங்களை சேர்ந்த சட்டத்தரணிகளால் குறித்த ஆர்ப்பாட்ட பேரணி முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,299)

## வவுனியாவில்...

கனிஷ்ட வித்தியாலயத்தில் கல்வி பயிலும் ஒன்பது வயதுடைய வி. டினோஜன் என்ற சிறுவனே உயிரிழந்துள்ளார்.

பாடசாலையிலிருந்து ஒருவர் தனது 7 வயது மகள் மற்றும் 9 வயதுடைய சிறுவனையும் மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு சென்றபோதே குறித்த விபரீதம் ஏற்பட்டுள்ளது.

விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## கொழும்பில்...

முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக, வடக்குக் கிழக்கு சட்டத்தரணிகள் சங்கங்களைச் சார்ந்த சட்டத்தரணிகள் மற்றும் தென்பகுதி சட்டத்தரணிகளையும் அழைத்து கண்டனப் போராட்டத்தை நடத்தவுள்ளனர்.

வடக்குக் கிழக்கின் எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த பெருமளவிலான சட்டத்தரணிகளும் தென்பகுதியைச் சேர்ந்த சட்டத்தரணிகளும் இப் போராட்டத்தில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-7)

## முல்லை பயண...

புரைக்கு அமைய, குறித்த விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தக் குழுக்கள் முல்லைத்தீவு நோக்கி செல்லவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## உ/த பரீட்சை...

எதிர்வரும் சில தினங்களில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்படும் என, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (ம-7)

## புலமைப்பரிசில்...

புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஒக்ரோபர் 15ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும் என பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் 2,888 பரீட்சை நிலையங்களில் பரீட்சைகள் இடம்பெறவுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## லிட்ரோவின்...

எப்படவுள்ளது.

விலைச்சூத்திரத்தின்படி எரிவாயுவின் விலை திருத்தம் குறித்து இன்று அறிவிக்கவுள்ளதாக லிட்ரோ நிறுவனத் தலைவர் முதித பீரிஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## சர்வதேச...

சர்வதேச விசாரணைகளை நடத்தாது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் வெளித் தரப்பின் தலையீடு இல்லை என அமெரிக்கா எப்.பி.ஐ. அறிக்கை வழங்கியுள்ளது.

இந்தியா, சீனா, அவுஸ்திரேலியா, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளின் இரகசியப் பொலிஸாரும் அறிக்கைகளை வழங்கியுள்ளனர். இலங்கையில் எந்தவொரு விடயத்துக்கும் சர்வதேச விசாரணை நடத்தப்படாது" என்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார். (ம-7)

# நீதிமன்றங்கள் மீதான நம்பிக்கை சிதைவடையும்

## பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்



(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் பாரதூரமானவை. காலம் தாழ்த்தாது விசாரணைகளை மேற்கொண்டு உண்மையை பகிரங்கப்படுத்த வேண்டும். இல்லையேல் நீதிமன்றத்தின் மீதான மக்களின் நம்பிக்கை சிதைவடையும் என பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் எதிரணியின் உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மற்றும் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் ஆகியன மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

அரசியலமைப்பின் 14ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகளை நீதித்துறையே பாதுகாக்கிறது. அரசியலமைப்பால் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்போது நீதிமன்றத்தின் ஊடாக அந்த முயற்சிகள் தடுக்கப்பட வேண்டும்.

நீதிபதிகள் அச்சமின்றி செயற்படுவதற்கு நீதித்துறை சுயாதீனமாக செயற்பட வேண்டும். முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி பாரதூரமான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார். சுயாதீனமான முறையில் செயற்பட முடியாது. ஆகவே பதவி விலகுவாக குறிப்பிட்டு அவர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார். இலங்கையின் நீதிக் கட்டமைப்பில் இவ்வாறான நிலை முன்னொருபோதும் ஏற்படவில்லை.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் பாரபட்சமின்றிய வகையில் வெகு விரைவாக விசாரிக்கப்பட்டு உண்மை பகிரங்கப்படுத்த வேண்டும். இல்லையேல் நீதிமன்றத்தின் மீதான மக்களின் நம்பிக்கை சிதைவடையும் என்றார். (ம-7)

## பேரின...

திரண்டுவர வேண்டும் என தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), தமிழ் மக்கள் கூட்டணி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகிய தமிழ்த் தேசியப் பரப்பில் செயற்படும் அரசியல் கட்சிகளே கூட்டாக அழைப்பு விடுத்துள்ளன. (ம-7)


தன நிதானய
திகதி - 2023.10.03
சீட்டிழுப்பு இலக்கம் - 1286
Q 01 14 50 78 Q
Double Chance 38275

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3498
சீட்டிழுப்பு திகதி 03.10.2023
X 14 35 47 62
X 33783
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.10.03
சீட்டிழுப்பு இலக்கம் 565
மீனம் 12 16 26 40 மீனம்

மஹஜன சம்பத
திகதி 2023/10/03
சீட்டிழுப்பு இலக்கம் 5256
S 6 6 8 5 8 5

மெகா பவர்
திகதி 03/10/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1604
S 08 28 33 57 75
32241

Lucky 7
திகதி 03.10.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0082
L7 இலக்கம் 3 2
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 3 0 4 3 7 0

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2230 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.10.03 தினம் செவ்வாய்க்கிழமை
45 60 73 75 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,225,980.40

ශනිදා
2023.10.03 4391
53 65 73 74 B
59,427,772.00
72083

சசிரி
வெற்றி வாரம் 384
சீட்டிழுப்பு திகதி 2023.10.03
ஊதா
வெற்றி இலக்கங்கள் 09 29 35
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,320,040/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3942 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.10.03 தினம் செவ்வாய்க்கிழமை
05 49 55 58
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,209,488/-
894025 371

ජයෝදා
03.10.2023 1406
A 20 37 41 42 50
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 447,388,194.20
797496 465
தொலை பேசி 011-2 333 546-47
Web : www.dlb.lk

அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2056
சீட்டிழுப்பு திகதி : 2023.10.03
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,955,312/-
33 42 58 75 Y
167477


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித சங்கிலி போராட்டம் யாழ். வணிகர் கழகம் ஆதரவு

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற வுள்ள' மனிதசங்கிலிப் போராட்டத்துக்கு அனைவரையும் பங்களிப்பு செய்ய வேண்டுமென யாழ்ப்பாண வணிகர் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ்ப்பாண வணிகர் கழகம் நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையில் இவ் விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் உள்ளதாவது,

முல்லைத்தீவு நீதிபதி அவர்களுக்கு நிகழ்ந்த விடயம் இந்த நாட்டில் அதியுச்ச இனவாதத்தின் வெளிப்பாடேயாகும். இந்த நாடு சுதந்திரம் அடைந்த பின்பு தமிழ் மக்கள் ஒதுக்கப்பட்டு அவர்களுடைய தமிழ்ப் பிரதேச நிலங்கள் பறிக்கப்பட்டுக் கொண்டு வருகிறது இதை எதிர்த்து தமிழ் மக்கள் பலகாலமாக போராடினார்கள்.

அது அகிம்சை, ஆயுதவழிப் போராட்டமாக நடைபெற்றது. இந்த நாட்டிலே போர் நிறைவு பெற்று 14 வருடங்கள் கடந்து இருக்கின்ற நிலையில் கூட, தமிழ் மக்களுக்கும், தமிழ் தலைமைக்கும், சர்வ தேசத்திற்கும் தீர்வு சம்பந்தமாக வழங்கிய உறுதிமொழிகள் எதுவும் அரசால் இது வரை நிறைவேற்றப்படவில்லை.

ஜனநாயக ரீதியிலும், மனித உரிமையை மதிக்கும் சிங்கள மக்களும், சர்வதேசமும் தற்போது விரைந்து தமிழ் மக்களுக்கான அதிகாரம் உள்ள தீர்வை வழங்க முன்வர வேண்டும். அத்துடன் பொருளாதா ரத்தில் வீழ்ச்சியுற்றிருக்கும் இந்த நாட்டினைக் கட்டியெழுப்ப வேண்டுமாக இருந் தால் தமிழ் மக்களுக்கான நியாயமான தீர்வும், இன ஒற்றுமையும் ஏற்படுத் தப்பட வேண்டும் என்று நாம் எண்ணு கிறோம். இன்று நடைபெறும் மனித சங்கிலிப் போராட்டத்துக்கு அனைவரையும் பங்களிப்பு செய்யவேண்டுமென தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது. (ம-7,33,104)

# நீதித்துறை மீது அரசின் அடக்குமுறைக்கு எதிராக

## மன்னாரில் இன்று கவனயீர்ப்பு போராட்டம்

(மன்னார்)

நீதித்துறைக்கு எதிரான அடக்கு முறைகளுக்கு எதிராக இன்றைய தினம் மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெறவுள்ளது.

சுயாதீன நீதித்துறையில் அரசியல் தலையீட்டை தடுப்போம் எனும் தொனிப் பொருளில் தொடர்சியாக நாடளாவிய ரீதியில் நீதி மற்றும் பொறுப்பு கூறல் செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள தாமதம் மற்றும் நீதித்துறை,நீதிபதிகள் மீது கட்டவிழ்துவிடப்பட்டுள்ள அடக்கு முறைக்கு எதிராக இன்று புதன்கிழமை மன்னார் மாவட்ட இளைஞர்கள் சிவில் சமூக அமைப்பினர் இணைந்து போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

மன்னார் பிரதான சுற்றுவட்ட பகுதியில் இன்று காலை 10 மணி தொடக்கம் 12 மணிவரை குறித்த கவனயீர்ப்பு போராட்டம் இடம் பெறவுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் தொடர்ச்சியான அடக்குமுறை செயற்பாடுகளை கண்டித்து இடம் பெறும் குறித்த போராட்டத்தில் மன்னார் வாழ் மக்களை கலந்து கொள்ளுமாறு போராட்ட குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-7,285)

## யாழில் கடும் காற்று காலநிலையால்

# மாணவர்கள் மத்தியில் பரவும் கண்நோய்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நிலவி வரும் வழமைக்கு மாறான கடும் காற்றுடனான கால நிலை காரணமாக வட மராட்சி, வலிகாமம் பிரதேச மாணவர்கள் மத்தியில் கண் நோய் பரவி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

கண் கடுமையாக சிவப்படைந்து, கண்ணில் பீழை தள்ளி, கண்ணில் நீர் சொரிவதுடன், கண்ணில் சிறிய எவிலான வலியும் நோய் அறிகுறிகளாக உள்ளன.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் வேகமாக பரவி வரும் இந்த தொற்று நோய் தொடர்பில் அவதானமாக இருப்பதுடன் மேற்கண்ட அறிகுறிகள் தென்படும் பட்சத்தில் அருகிலுள்ள மருத்துவமனைகளை நாடுமாறு பொது சுகாதார பிரிவினர் அறிவித்துள்ளார்கள்.

குறித்த கண்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் சுத்தமான கைக்குட்டையினை பயன்படுத்துமாறும், வெயில், தூசிகளுக்குள் செல்வதனை தவிர்க்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். (ம-7,33)


CANADA VISA

1)Minor Education - (Age Limit - 7 to 17 years) தாய், தந்தை இருவரும் பிள்ளையுடன் பயணிக்கலாம்.
2)Visitor Visa - கனடாவில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.
3)Student Visa-IELTS 6.00 உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.(Jan 2024)
4)Work and Study Program - Course fee after Visa மற்றும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

Contact : VISA Consultant,
136, Adiyapatham Road,
Thirunelvely, Jaffna. T.P : 077 038 5584
(17311)

வெளிநாடுகளுக்கான DHL பொதிகள் சேவை
மிகக் குறைந்த கட்டணத்தில்
UK - 400/=, Canada - 1000/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற்
T.P : 0777 55 45 28
321, K.K.S. Road, Jaffna.
(17311)

காணி விற்பனைக்கு
கோண்டாவில் மேற்கு ஸ்ரேசன் வீதியில் (காளி கோயிலுக்கும் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கும் இடையில்) 1 1/2 பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு.
(17282)
077 728 6061

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17302)
076 825 7716 (ஆகாஸ்)

விசா விண்ணப்பம்
கனடா | பிரான்ஸ் | லண்டன்
ஆகிய நாடுகளுக்கு விசிட் விசா,பொன்சர் விசா மற்றும் வேலைவாய்ப்பு விசாக்கள் ஆகிய விசாக்கள் பெற்றுத் தரப்படும். ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்
கனடா விசிட் விசா 45 நாட்களில் பெற்றுத்தரப்படும்.
ருமேனியா, சேர்பியா, இத்தாலி, கனடா ஆகிய நாடுகளுக்கு வேலை விசாக்கள் பெற்றுக்கொள்ளலாம்.
வேலைகள்
● நீர்க்குழாய் பொருத்துனர் (Plumper)
● மின்னிணைப்பாளர்
● சுத்திகரிப்பாளர் (Cleaner)
● விருந்தோம்பலும் உபசரிப்பு (hotel management)
அனைத்து தகவல்களும் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்
(நிபந்தனைக்குட்பட்டது)
(17334)
NSA Group of Company (Pvt) Ltd.
197,Main Street, Jaffna.
077 266 6429, 021 221 0599
077 877 4838

VILLAGE HOTEL
JAFFNA EXPRESS
பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE





யாழ் - கொழும்பு
2,900/=
வடமராட்சி - கொழும்பு
2,700/=
(17019)
T.P:077 544 8503

வேலைவாய்ப்பு
கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் எமது நிறுவனத்தின் கிளைகளுக்கு அவசர ஆட்சேர்ப்பு
➢பயிற்சியின் போது 25000 – 32500 வரை மாத வருமானம் பெற முடியும்
➢தங்குமிட வசதி இலவசம்
➢ஊக்குவிப்பு தொகை வழங்கப்படும்.
➢தகைமை - Grade 10, O/L, A/L, degree
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
(17332)
076 021 2487, 077 512 0915

அலுவலக வேலை - பயிற்சி
2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு
*நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?
*இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி
*பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்





(C-7369)
சம்பளம் - 60,000/- (2 மாதம்)
V2 TRAVELS - 0777-068-777

VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✔ONLINE APPLICATIONS
✔VISA APPOINTMENTS
✔PASSPORT APPLICATION
✔POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
(C-7369)






Visa Extension
இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

தென்னிந்திய யாத்திரை
தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரியுடனான யாத்திரை
ஆரம்பம் : 13.11.2023 | யாத்திரிகர் : 10 | நாட்கள் : 16
**தரிசிக்கும் இடங்கள்** : உச்சிப்பிள்ளையார், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம் பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காலகஸ்தி, திருவெண்ணாமலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவெண்ணைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷாணம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழபகவான், செவ்வாய், ராகு, கேது, சனி பகவான், திருநள்ளாறு, நளன்குளத்தில் நீராடல், தோணியப்பர், குருவாயூர், மைசூர், சாமுண்டீஸ்வரி, நந்திகோவில், கன்னியாக்குமாரி, சுசீந்திரம், மனக்குழ விநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி பிள்ளையார், பட்டி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 60 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR, ஜெயலலிதா, அண்ணா சாமதிகளையும் மைசூர் பாலஸ், பிருந்தாவனம் காடின், அப்துல் கலாமின் மணிமண்டபமும் பார்க்கலாம்.
**தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை** : இருவழி விமான ரிக்கட், மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர் 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வருவும் வாகன வசதி இவை அனைத்தும் எமது சேவை.
மேலும் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும் சகல ஆலயங்களும் பூசை நேரத்தில் தரிசிக்கலாம்.(இத்துடன் யாழ் - கொழும்பு போக வர வாகன வசதி செய்து தரப்படும்.)
"வந்தவரை கேளுங்கள் சென்றுவரலாம் வாருங்கள்"
சீரடி பாபா தரிசனம் திருப்பதி
ஆரம்பம் 20.12.2023 நாட்கள் 06 சீரடி பாபா 03 நாள் சனி சிங்கனபூர் திருப்பதி Vip தரிசனம் சென்னையில் 1 நாள் சொப்பிங்
(17331)
தொடர்புகளுக்கு : கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன்: ராஜன்
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
sriranganathan1944@gmail.com, sriranganathan2601@gmail.com
077 768 0102, 077 736 2154

தரம் 01 முதல் 05 வரையான மாணவர்களுக்கான,
யாழ் எக்ஸ்பிரஸ்
YARL EXPRESS
ஆரம்பக்கல்வியில் அனுபவம் வாய்ந்த, நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த, முன்னனி ஆசான்களின் தொகுப்பில், 02-ம் தவணை மாதிரி வினாத்தாள் தொகுப்பு விடைகளுடன்
GR. 01-04 Rs. 230.00
GR. 05 Rs.400.00
(C-7366)
Hotline : 0777220324 / 0776258778
யுனிலங்காஸ் வெளியீடு - எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org